நகரத்தார் குரல்

(சமூக, இலக்கிய மாத இதழ்)



வேழ முகத்து விநாயகன் ஒருபால்;
வீணை இன்னிசை வாணியும் ஒருபால்;
வாழ வளந்தரு திருமகள் ஒருபால்;
வாழ்த்தி வணங்கி வளம்பெறு வோமே

மார்ச் 1989

உ

சிவமயம்

நகரத்தார் குரல்

(சமூக, இலக்கிய மாத இதழ்)

குரல் 8
ஒலி 2

விபவ
மாசி

மார்ச்
1989

அலங்கலில் தோன்றும் பொய்ம்மை அரவெனப் பூத மைந்தும்
விலங்கிய விகாரப் பாட்டின் வேறுபா டுற்ற வீக்கம்
கலங்குவ தெவரைக் கண்டால்? அவரென்ப கைவில் ஏந்தி
இலங்கையில் பொருதா ரன்றே, மறைகளுக் கிறுதி யாவார்!

—கவிச்சக்கரவர்த்தி கம்பர்

ஆசிரியர்:
வி. என். சிதம்பரம் செட்டியார்

வெளியிடுபவர்:
சுப. அ. நடராசன் செட்டியார்

துணை ஆசிரியர்;
எல். சுந்தரம்

அலுவலகம்:
25, வடக்குச் சித்திரை வீதி,
மதுரை-625 001.

தொலைபேசி: p. p. 26668

தனி இதழ் ரூ. 2-00 ஆண்டுச் சந்தா ரூ. 24-00

சுவர்ண ஆகர்ஷண பைரவர் ஆலயக் குட நீராட்டு !

'பைரவர்' என்றதும் அந்த வடுகநாத வடிவம்தான் நம் நினைவில் வரும். அந்த சாந்தமான அம்பிகையுடன் தரிசனம் தரும் பைரவரின் வடிவம்தான் சுவர்ண ஆகர்ஷண பைரவர்! இந்த சுவர்ண ஆகர்ஷண பைரவர் பற்றி மந்திர சாஸ்திர நூல்கள் வெகுவாகப் பேசுகின்றன.

தமிழகத்தில் தேவகோட்டையில்தான் முதன்முதலாக அருள்



மிகு சுவர்ண ஆகர்ஷண பைரவர் ஆலயம் தோற்றுவிக்கப் பெற்றுள்ளது. நூல்களில் கூறிய தியான முறைப்படி பைரவர் மூர்த்தியும் ஐம்பொன் சிலையாக வார்க்கப் பெற்றுள்ளது. அங்கு பைரவர் நான்கு கரங்களுடன் காட்சியளிக்கிருர். ஒரு கரத்தில் வரதமும் ஒரு கரத்தில் அபயமும் ஒரு கரத்தில் தங்கக் கலசமும் மற்றொரு கரத்தில் தேவியை அணைத்தவாறும் சுவர்ண ஆகர்ஷண பைரவர் எழுந்தருளி உள்ளார்; கிழக்கு முகம் பார்த்த இம்மூர்த்திக்குத் தென்புறத்தில் லெட்சுமி கணபதியும் வடபுறத்தில் வள்ளிதெய்வானை சமேத சுப்பிரமணியரும் எழுந்தருளியுள்ளனர். இதுவும் ஐம்பொன் சிலையாகும்.

சிறிய அழகிய இவ்வாலயம் முழுவதும் சலவைக்கல் பதிக்கப் பெற்றுள்ளது. இவ்வாலயத்தை இலுப்பைக்குடி நகரக் கோயிலின் அறங்காவலரும் சென்னை வைரம் நிறுவனங்களின் உரிமையாளருமான சேவு. சின்னவடிவேல் செட்டியார் அவர்கள் தேவகோட்டை தி. ஊரணி மேல்கரையில் அமைத்திருக்கிருர்கள்.

இவ்வாலயத் திருக்குட நீராட்டையொட்டி 27-1-89 அன்று தொடங்கி நான்கு கால யாகசாலைப் பூஜைகள் நடைபெற்றன. 28-1-89 அன்று கே. வீரமணி - ராதா குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சியும் சிறப்பாக நடைபெற்றன 29-1-89 ஞாயிறன்று காலை 10 மணி அளவில் திருக்குட நீராட்டு விழா இனிதே நடைபெற்றது இவ்விழா பற்றிய சிறப்பு நிகழ்ச்சியை மதுரை வானொலி நிலையம் 30-1-89 அன்று ஒலிபரப்பியது.

—சி. ஐம்புலிங்கம்

திருமணம்

நற்சாந்துபட்டி குமசித. நடராசன் செட்டியார் அவர்கள் புதல்வன் செல்வன் சிதம்பரம் என்ற கணேசனுக்கும் செவ்வூர் பெரி. பழ. பழனியப்ப செட்டியார் அவர்கள் புதல்வி செல்வி ஏகம்மை என்ற உஷாவிற்கும் 27-1-89 அன்று செவ்வூரில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

* * *

கீழச்சிவல்பட்டி நா. இராமசாமி M.A.B.L அவர்கள் புதல்வன் செல்வன் நாகப்பன B.E க்கும் பள்ளத்தூர் சுப. பெரியண்ணன் செட்டியார் அவர்கள் புதல்வி செல்வி தெய்வானைக்கும் 8-2-89 அன்று பள்ளத்தூரில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

தமிழகத்தில் மீண்டும் கலைஞர் ஆட்சி

''உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாங்கு'!

என்று திருமுருகாற்றுப்படை பாடியதற்கேற்ப. தமிழகத்தில் மீண்டும உதய சூரியன் தோன்றியிருக்கிருன். பதினமூனருண்டுகளுக்குப பின்னுல் செந்தமிழ்ப பற்றும் செயலாற்றலும கொண்ட கலைஞர் மு. கருணுநிதி அவர்கள் தமிழகத்தின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கிருர்கள். ஊழலும லஞ்சமும் ஒன்ருய்ச் சேரவும் நிர்வாகத திறமை நிலை தடுமாறவும தமிழகம் தவித்துக் கொண்டிருக்கும் இருட்டு வேளையில் கதிரவனுககு வரவேற்டளித்து,

இதனை இதனுல் இவன்முடிக்கும் என்ருய்ந்து
அதனை அவன்கண் விடல்.

என்ற வள்ளுவன் வாக்கிற்கேற்பத் தலைமையைத் தமிழ்ப் பற்றுடைய கலைஞரிடம் ஒபபடைதத தமிழ மக்களைப் பாராட்டுகிருேம் உறவுக்குத் தோள் கொடுத்து உரிமைக்குக குரல் கொடுக்கும் கலைஞர் அவர்களை மகிழ்வோடு பாராட்டி வரவேற்கிருேம்.



இன்றமிழ்க் காப்பியம் சிலம்புக்காக எழுநிலை மாடம் அமைத்தவர் கலைஞர். கட்டபொம்மன் கோட்டை தன்னைத் திட்டமிட்டுச் செய்தவர் கலைஞர். விவேகமும் வேகமும் பெற்றவர். ஆதலால் விவேகானந்தர் பாறை தன்னை அன்னை வாழும் கன்னியா குமரியில் முன்னம் அமைத்து முடித்தவர் கலைஞர். வள்ளுவர் வழியில் வாழ்ந்திட வேண்டி வள்ளுவர் கோட்டம் வகுத்தவர் கலைஞர். தன்னை மதித்தே அழைக்காத் தன்மையால் தானே நுழைய மறுத்தவர் கலைஞர். பதின்மூன் றாண்டுகள் பார்த்துப் பார்த்து விதியை மாற்றி வீரனாய்த் தோன்றி வள்ளுவர் கோட்டத்தில் மணிமுடி சூடி உள்ளத் திண்மையை உணர்த்தினார் கலைஞர்.

கட்டுப்பாட்டினாலும் நெஞ்சுரத்தாலும் கலைஞர் பெற்ற வெற்றியை உலகமே பாராட்டுகிறது. நிதியில்லா நிலைமையில் நிகரில் கருணா நிதியெனத் தோன்றி நிலைத்த கலைஞரை நகரம் வாழ நற்பணி யாற்றும் "நகரத்தார் குரல்" பாராட்டுகிறது. அவருடைய ஆட்சியில் ஆலயப் பணியும் அறப்பணிகளும் சிறக்கவும் தமிழகம் தொழில் வளத்திலும கல்வித்துறையிலும் இழந்த பெருமையை மீண்டும் பெறவும் வாழ்த்துகிறோம்.

அற நிலையத்துறை அமைச்சருக்குப் பாராட்டு

மாண்புமிகு கே பி. கந்தசாமி அவர்கள் இந்து அறநிலையத் துறை அமைச்சராகப் பதவி ஏற்றிருப்பதைப் பாராட்டுகிறோம். திரு. கந்தசாமி அவர்கள் இந்து அற நிலையத்துறை அமைச்சராகப் பொறுப்பேற்றிருப்பது தமிழ்நாடு செய்த தவப்பயனாகும். இவர்கள் தலைமையில் இந்து சமயமும், திருக்கோவில்களும் சீர்பெற்று சிறப்பாகத் திகழும் என கண்டவராயன்பட்டி அருள்நெறித் திருக்கூட்டச் செயலாளர் திரு. நா. அருணாசலன் தெரிவிக்கிறார்.

எனது வெளிநாட்டு அனுபவங்கள்

வி.என்.சிதம்பரம்



—38—

நியூயார்க்கில் நாங்கள் தங்கியிருந்த ஓட்டலைக் காலி செய்து கொண்டு சாமான்களை எல்லாம் எடுத்துக் காரில் வைத்துக் கொண்டு மதியம் 12 மணிக்குப் புறப்பட்டோம். வழியில் ஓர் இடத்தில் சாப்பிட்டுவிட்டு சுமார் 3 மணியளவில் பவளம் வாங்குவதற்காக ஒரு கடைக்குச் சென்றோம். எங்கள் காரின் டிக்கியும் மாருதி கார் போல் இருந்தது. உள்ளே இருக்கும் சாமான்களை கண்ணாடி வழியாகப் பார்க்கலாம். பவளத்தை வாங்கிக் கொண்டு சுமார் 3-45க்கு காருக்குத் திரும்பினோம். காரைப் பார்த்ததும் எங்களுக்கு அதிர்ச்சியாக இருந்தது கார்க்கதவு திறக்கப்பட்டு அதில் இருந்த இரண்டு டிரங்க்குகள் களவாடப்பட்டிருந்தன. சுற்றிப் பார்த்தோம். ஒன்றும் தென்படவில்லை. இவ்வளவுக்கும் அந்த இடம் மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள இடம். சென்னை அண்ணாசாலையைப் போல முக்கிய தெரு அது. களவு போயிருந்த சாமான்கள் களவாடியவருக்குப் பயன்படாது. காரணம், அவற்றில் சேலை, துணிமணிகள் முதலியவைதான் இருந்தன அந்தப் பெட்டியில்தான் என்னுடைய பாஸ்போர்ட்டும் என்னுடைய மனைவியின் பாஸ்போர்ட்டும் இருந்தன.

என் மகனும் உடனடியாகக் காவல் நிலையத்திற்குச் சென்று புகார் கொடுத்தான். புகாரைப் பெற்றுக் கொண்டு போலீசாப் ஜீப்பில்வந்து இடத்தைப் பார்வையிட்டனர். அவர்கள் வந்த தோரணையில் திருடர்களை உடனே பிடித்துக் கொடுத்து விடுவார்கள் என்று நான் நினைத்தேன். ''களவு போன பொருட்கள் கிடைத்து விடுமா?'' என்று அவர்களிடம் கேட்டேன். அதற்கு அவர்கள் சொல்லிய பதில் வியப்பாக இருந்தது. ''முடிந்தவரை முயற்சி செய்து பிடித்துக் கொடுக்கிறோம். போலீஸ் ரிப்போர்ட் காப்பி இருந்தால் தான் நீங்கள் புது பாஸ்போர்ட் வாங்க முடியும்'' என்று சொன்னார்கள்.

உடனே என்மகனும் போலீஸ் நிலையம் சென்று ரிப்போர்ட் காப்பியை வாங்கிக் கொண்டு வந்தான். அப்பொழுது மாலை 5மணி இருக்கும். அங்கு 5 மணிக்கே இருட்டத் தொடங்கிவிடும். அந்த வழியாகக் காரில் சென்று கொண்டிருந்த வடஇந்தியர்கள் காரை நிறுத்திவிட்டு ''என்ன இப்படி நிற்கிறீர்கள்?'' என்று கேட்டார்கள். நாங்களும் நடந்த விவரத்தைச் சொன்னோம். அதற்கு அவர்களும் ''இந்த ஊர் மிகவும் ஆபத்தான ஊர். உடனே இடத்தைக் காலி செய்யுங்கள். இதுவரை உங்களுடைய பெட்டிகள்தான் காணமல் போயிற்று. இன்னும் நின்று கொண்டிருந்தால் துப்பாக்கியைக் காண்பித்து நகைகளைப் பறித்துக் கொண்டு



அமெரிக்க நாட்டில் நியூயார்க் நகரில் உள்ள லிபர்ட்டி சிலை முன்பு திருமதி ராணி வள்ளியப்பன், திருமதி கமலா சிதம்பரம், திரு. வி. என். சிடி. வள்ளியப்பன், செல்வி கமலா ஆகியோர்.

போய் விடுவார்கள்.'' என்று சொல்லிப் புறப்படச் சொன்னார்கள். போலீஸ் ரிப்போர்ட் காப்பியை எடுத்துக் கொண்டு எங்கள் பயணத்தை ரத்துச் செய்துவிட்டு மீண்டும் ஓட்டலில் அறை எடுத்துத் தங்கினோம்.

வளர்ச்சி பெற்ற அந்த நாட்டில் எந்த அளவுக்குத் தவறான காரியங்கள் பகலிலே நடக்கின்றன என்பதற்கு அது ஒரு உதாரணம். வெளிநாடு செல்பவர்கள் பாஸ்போர்ட்டை பெட்டியில் வைக்காமல் கோட்டுப் பாக்கெட்டிலேயே பத்திரமாக வைத்திருக்க வேண்டும். குறிப்பாக அமெரிக்காவில் நியூயார்க்கில் இதுபோன்ற திருட்டு நிகழ்ச்சிகள் அதிக அளவு

நடைபெறுகின்றன. மறு நாள் காலையில் இந்தியன் ஹைகமிஷன் ஆபீஸிற்குப் போலீஸ் ரிப்போர்ட் காப்பியுடன் சென்றோம். அங்கு அதைப் பார்த்துவிட்டு எங்களின் புகைப்படத்தைக் கேட்டார்கள். நாங்களும் அதுபோல் உடனடியாகப் புகைப்படங்களை எடுத்து வந்து கொடுத்தோம். அவர்கள் எங்களுக்கு 6 மாதத்திற்குப் பாஸ்போர்ட் தந்தார்கள். நாங்கள் இந்திய ஹைகமிஷன் ஆபீஸில் இருந்தபோது எங்களுடன் பலர் அமர்ந்திருந்தார்கள். அவர்களை விசாரித்தபோது அவர்களில் பலர் எங்களைப்போல் பாஸ்போர்ட்டைப் பறிகொடுத்து விட்டுப் புதிதாக பாஸ்போர்ட் வாங்க வந்தவர்கள் எனத் தெரிய வந்தது. பாஸ்போர்ட்டைப் பெற்றுக் கொண்டு நாங்கள் நயாகரா நீர்வீழ்ச்சியைப் பார்ப்பதற்காகப் புறப்பட்டோம்.

(வளரும்)

தங்கமணி-மணிமேகலை திருமண விழாவில்...

சுந்தர அண்ணனை நான் அறிமுகப்படுத்தவில்லை என்னைப் பேட்டி கண்டு "தமிழ்நாடு" இதழில் முதன் முதலில் என்னை அறிமுகப்படுத்தியவர் அவர். எதனையும் எதிர்பாராமல் உண்மையான தொண்டு செய்பவர். திறமைசாலிகளை இனம் கண்டு அவர்களைப் பற்றிச் சிறப்பாக எழுதக் கூடியவர். நல்ல எழுத்தாளர்.

'பொற்கிழிக் கவிஞர்' திரு. சொ. சொ. மீ. சுந்தரத்திற்கு எத்தனையோ மாணவர்கள் இருந்தாலும் என் வயதில் அவருக்கு மாணவர்கள் இருக்க முடியாது.

மீனாட்சி, பொற்கிழிப் பரிசை வேறு யாருக்கும் கொடுக்கவில்லை. தன் கணவர் பெயருடைய திரு அருசோமசுந்தரத்திற்கும் திரு. சொ. சொ. மீ. சுந்தரத்திற்கும்தான் கொடுத்திருக்கிறாள்.

—வி. என். சிதம்பரம் செட்டியார்

அருட் செல்வம், பொருட் செல்வம் இவைகளைவிட எனனிடம் நட்புச் செல்வம் அதிகம் உண்டு.

மணமக்களின் பெயர்ப் பொருத்தம் எல்லோருக்கும் நன்கு அமைந்துவிடாது. தங்கமணி—மணிமேகலை. மணியில் முடிந்து மணியில் தொடங்கும் இந்தப் பெயர்கள் அந்தாதி போல் உள்ளது.

—அழ. வள்ளியப்பா

"நகரத்தார் குரல்" லில் அட்டைப்படமாக வெளிவரும் பெரும்பான்மையான படங்கள் நாங்கள் தயாரித்து வெளியிடுபவையாகும். அவ்விதழின் சிறப்புக்கு சுவாமி படங்களும் ஒரு காரணமாகும்.

திரு. சுந்தரம் எழுதி வெளியிடும்' செய்திகள் வாசிப்பவர்...' பகுதி மிக நல்ல பகுதியாகும். திரு. சுந்தரம் எல்லோரிடமும் அன்பாகவும் பவ்வியமாகவும் நடந்து கொள்கிறார். அதனால் "நகரத்தார் குரல்'வின் ஆலோசனைக் குழு உறுப்பினர்கள் அவருக்கு நல்ல ஒத்துழைப்பை நல்குகிறார்கள்.

—'கலைமகள்'
நடராஜன் செட்டியார்

இது மண விழா தான். ஆனாலும் இது 'எல்லெஸ்'ஸின் மணி விழா போலவும் "நகரத்தார் குரல்" ஆண்டு விழா போலவும் நகரத்தார் பாராட்டு விழா போலவும் தோன்றுகிறது.

கல்யாணங்களுக்கெல்லாம் தலைமை தாங்கும் வி. என். சிடி. அவர்கள் கல்யாணக் கோலத்தில் சன்னதியைத் தோற்றுவித்த பெருமைக்குரியவர்கள், நாயக்கர் கட்டுப் பின்பு தர்மம் செய்த பெருமகனார்.

மீனாட்சி கல்யாணத்தில்

பச்சைமாமலைபோல் மேனி திருமால் அமர்ந்திருந்தார். அதேபோல் இங்கு திருமால் நிறமுடைய வி. என. சிடி. அவர்கள் அருகிருந்து வாழ்த்தரங்கம் சிறப்பாய் நடக்கிறது.

வாழ்த்தரங்கில் எத்தனைபேர் கலந்து கொண்டு வாழ்த்திப் பேச வந்தாலும் சரி அத்தனை பேருக்கும் நான் பொன்னாடை அணிவிக்கத் தயாராக இருக்கிறேன் என்பது போல் திரு. சுந்தரமும் தன் முன்னால் ஒரு ஜவுளிக்கடையையே வைத்துக் கொண்டு அமர்ந்திருக்கிறார்.

- சொ. சொ. மீ சுந்தரம்

நடராஜர் பெயரால் உள்ள ஒரே ஒரு சிறப்பான ஊர் இந்த நடராஜபுரம். இந்த நடராஜபுரத்திற்கு சிதம்பரம் வந்து தலைமை தாங்கி வாழ்த்தரங்கினை நடத்துவது பொருத்தமானதே!

''தமிழ்நாடு'' இதழில் நானும் சுந்தரமும் ஒன்றாகப் பணியாற்றினோம் என்பதில் பெருமை கொள்கிறேன்.

எழுத்தாளர்களுக்குச் சுதந்திரம் இல்லையேல் சுவையான எழுத்துக்கள் பிறக்க முடியாது. அந்த வகையில் சுந்தரத்திற்குச் சுதந்திரம் அளித்துள்ள திரு வி. என். சிதம்பரம் அவர்களைப் பாராட்டுகிறேன்.

—அரு. சோமசுந்தரன்

பெண் சாப்பிட்ட பின்பு ஆண் சாப்பிடுவது சங்க இலக்கிய மரபு. ஆனால் ஆண் சாப்பிட்ட பின்பு பெண் சாப்பிடுவதுதான் நகரத்தார் மரபு.

'எல்லெஸ்' எப்படி அவருடைய மாமனாரிடம் பிரியமாக இருக்கிறாரோ அதேபோல் 'காசிஸ்ரீ' அரு. சோ.விடம் அவருடைய மாப்பிள்ளையும் மிகப் பிரியம் உள்ளவர்.

தங்கை மணிமேகலை அவருடைய மாமியாரை ''அய்த்தை சாப்பிடுறீங்களா? அய்த்தை குளிக்கிறீங்களா?'' என்று அடிக்கடி 'அய்த்தை' போட்டு அழைத்தால் வாழ்க்கை சிறப்பாக அமையும.

-மா. முத்துராமன்

''தமிழ்நாடு'' இதழில் நான் 21 ஆண்டுகள் பணியாற்றினேன். அதில் கிடைக்காத பெருமை ''நகரத்தார் குர''லில் 7 ஆண்டுகள் பணியாற்றியதில் எனக்குக் கிடைத்திருக்கிறது. அந்தப் பெருமைக்குக் காரணகர்த்தா என் அன்பிற்குரிய வி. என். சிடி. அவர்கள்.

நான் பேனாப் பிடித்து அதிகம் எழுதக் கூடியவன்; மைக் பிடித்துப் பேசிப் பழக்கப்பட்டவன் அல்ல. மணிக்கணக்கில் பேசக் கூடிய அறிஞர்கள், பேராசிரியர்கள், புலவர்கள் பங்கு பெற்றுப் பேசிய நேரத்தில் இல்லாத மின்சாரம் பேசத் தெரியாத நான் பேசும்போது வந்திருப்பது விந்தையாக இருக்கிறது.

- எல். சுந்தரம்


(நகரத்தார் குர''லின் துணை ஆசிரியர் திரு. எல். சுந்தரத்தின் புதல்வன் செல்வன் தங்கமணி செல்வி மணிமேகலையின் திருமணம் 3-2-89 அன்று நடராஜபுரத்தில் நடைபெற்றபோது ஆசிரியர் வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்கள் தலைமையில் நடைபெற்ற வாழ்த்தரங்கில் கேட்ட நல்முத்துக்கள் இவை)

தொகுப்பு: 'புலவர்மாமணி'


மா. முத்துராமன்



ஒக்கூர் திரு. நா. லெ. சுந்தரம் செட்டியாரின் (துணை ஆசிரியர், "நகரத்தார் குரல்") புதல்வன் செல்வன் தங்கமணி M. Sc., க்கும் நடராஜபுரம் சிந ஆறு. சே. நாகப்ப செட்டியார் அவர்களின் புதல்வி செல்வி மணிமேகலை (B. Com.,)க்கும் 3-2-89 அன்று நடராஜபுரத்தில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.



மேற்படி திருமண விழாவில் மண மக்களுடன் ஆசிரியர் திரு. வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்கள், அவர்களது புதல்வி திருமதி ஆனந்தி பெரியகருப்பன், மாப்பிள்ளை திரு. ஏஎல். பெரியகருப்பன் அவர்கள்.



நடராஜபுரத்தில் 3-2-89 அன்று நிகழ்ந்த செல்வன் தங்கமணி-செல்வி மணிமேகலை திருமண விழாவில் வி. என். சிடி. அவர்கள் வாழ்த்தரங்கத் தலைமையேற்க முத்து. உல. சுப. உலகப்பன் அவர்கள் வரவேற்றுப் பேசும் காட்சி.

திருவனந்தபுரத்தில் நகரத்தார் சங்கம்

திருவனந்தபுரம் கிள்ளிப் பாலத்தில் உள்ள தமிழ்ச்சங்கக் கட்டிடத்தில் 13-11-88 அன்று திருவனந்தபுரம் நகரத்தார் சங்கத்தின் தொடக்கவிழா நடைபெற்றது. சங்கத்தின் தலைவர் திரு. எஸ் எம். செல்லப்பன் தலைமை ஏற்று வரவேற்றார். திருநெல்வேலி நகரத்தார் சங்கத்தின் முன்னாள் தலைவர் திரு சோம. நடராஜன் குத்துவிளக்கேற்றி சங்கத்தைத் தொடங்கிவைத்து வாழ்த்துரை வழங்கினார். திரு. பிஎல். இராமநாதன் உறுப்பினர்களையும் அவர்களது குடும்பத்தினரையும் அறிமுகம் செய்து வைத்தார்.

இவ்விழாவில் சிறப்பு விருந்தினர்களாக திரைப்படக் கதாசிரியரும் இயக்குநரும் தென்னிந்தியத் திரைப்படக் கழகத்தின் தலைவருமான திரு. வலம்புரி சோமநாதன், திரைப்பட இயக்குநர் திரு. எஸ்பி. முத்துராமன் நாச்சியாபுரம் திரு. திருப்பதி செட்டியார் திருநெல்வேலி சங்கச் செயலாளர் திரு. பிஎல் மீனாட்சிசுந்தரம், மேலைச்சிவபுரி திரு அ. சொ. சிவப்பிரகாசம் திரு. எம். அழகப்பன் ஆகியோர் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றினார்கள் சங்கச் செயலாளர் திரு. எஸ். கணபதி நன்றிகூறினார்.

இச்சங்கத்தின் தலைவராக திரு. எஸ்எம செல்லப்பனும் (தேவகோட்டை) துணைத்தலைவராக திரு எம். அழகப்பனும் (பி. அளகாபுரி) செயலாளராக திரு எஸ். கணபதியும் (வலையபட்டி) இணைச்செயலாளராக திரு. பிஎல். இராமநாதனும் (விராமதி) பொருளாளராக திரு என். வள்ளியப்பனும் (நாட்டரசன்கோட்டை) செயலாற்றி வருகின்றனர்.

சங்கத்தின் முகவரி:

Nagarathar sangam,
39/1463 Kuriyathi Road,
Trivandrum-695 009
Kerala state

சபரிமலை பங்குனி உத்திரம்-ஸ்ரீஐயப்பன் தெரிசனம்

21—3—89 TO 22—3—89 இரண்டு நாட்கள்

மதுரை- குற்ருலம் - ஆரியங்காவு - குளத்துப்புழா - பம்பை - சன்னிதானம் (தங்கல்) - மதுரை.

காலை ஆகாரம், பகல் சாப்பாடு. மாலை ஸ்வீட் - காரம் - காபி, இரவு ஆகாரம், பஸ் கட்டணம் உள்பட நாள் 2க்கு நபர் 1க்கு ரூ. **140/-**

சித்திரை விஷு சபரிமலை ஸ்ரீ ஐயப்பன் தெரிசனம்

மதுரை - திருமூர்த்திமலை - குருவாயூர் - காலடி (தங்கல்) - பம்பை- சன்னிதானம - ஆரியங்காவு - மதுரை.

காலை ஆகாரம், பகல் சாப்பாடு, மாலை ஸ்வீட் - காரம் - காபி, இரவு ஆகாரம, பஸ்கட்டணம் உள்பட நாள் 3க்கு நபர் 1க்கு ரூ. **210/-**

அட்வான்ஸ் ரு **75/-** வீதம் அனுப்பிப் பதிவுசெய்ய வேண்டுகிறேம்.

காசி - பத்ரிநாத் - கேதார்நாத்

25 நாட்கள் கொண்ட வட தேச யாத்திரை
சென்னையிலிருந்து ரயில் மூலம் 25-5-1989ம்
தேதி துவங்குகிறது

பம்பாய் - ஆக்ரா - மதுரா - பிருந்தாவனம் - டெல்ஹி- ஹரித்துவார் -ரிஷிகேஷ் - பத்ரிநாத் - கேதார்நாத் - அயோத்தியா - அலகாபாத் - (பிரயாகை) - காசி - கயா - புத்தகயா - கல்கத்தா.

தூங்கும் வசதி கொண்ட இரண்டாம் வகுப்பு (G S காரேஜ்) ரயில் கட்டணம், காலை டிபன், காபி, பகல் சாப் ாடு. இரவு ஆகாரம், பத்ரிநாத் - கேதார்நாத் சென்று வரும் பஸ்கட்டணம், எல்லா ஊர்களிலும் சுற்றிப் பார்க்கும் கடடணம் உள்பட

நபர் 1க்கு ரூ. **4800/-**

விரைவில் ரூ. **500/-** வீதம் அட்வான்ஸ் அனுப்பிப் பதிவு செய்ய வேண்டுகிறேம்.

சுபம்
டிராவல்ஸ் ஏஜன்ஸி.
226, நாயக்கர் புதுத்தெரு, மதுரை-1. ☎ 22712

Prop : சொ. சுப்பிரமணியம்

கன்னல் மொழிக் கவிஞரேறு கண்ணதாசன் புகழ் வாழ்க!

—கூப. செந்தமிழ்ச்செழியன்—

கன்னல் கரும்புகள் கனிதரும் கவின் மரங்கள்
எண்ணிலாப் பண்கள் எழிலிசைப் பாடல்கள்

வண்ணவடிவ மானதோர் வானவிற் கோலங்கள்
கண்ணிலும் விண்ணிலும் கண்சிமிட்டும் தாரகைகள்

தென்புலத்தார் தமிழமுதத் தேன் தமிழ்க் குடங்கள்
தென் பொதிகைத் தென்றலிலும் தேசுலாவும் கீதங்கள்

நல்லவர் அவர் நாவ சைத்த வேதங்கள்
பல்லவர் வடித்த நல் பழமைப் படிமங்கள்

கவிதையைக் காதலியாய் காமுற்முன் கண்ணதாசன்
காமுகி அவள் தளிர்க் கரங் கோர்த் தாடினுன்

ஓதினுன் செவியில் உண்மைத் தத்துவத்தை
மோதினுன் தமிழ்ப் பகைவரின் முள்முகத்தை

இளமையாய் இன்பமாய் என்னருந் தமிழாய்
வளமையாகவே வந்துதித்தனன் தென்னவர் திருநாட்டில்

காமுற்ற கவிவானரும் கற்றனர் அவன் கவிதை
தாமொத்து உவந்து ஏற்றனர் அவன் தலைமை

இன்னுமோர் இருநூறு ஆண்டுகள் போனுலும்
இவன்போல் கவிஞரினி ஈண்டு பிறப்பரோ

மண்ணில் வந்த நிலவு இவன் மறத்தமிழர் மரபில்
எண்ணிலாக் கவிதைகள் எழுதிக் கண்டான் உயர்வு

மேளங்கள் முழங்கட்டும் மின்னல்கள் ஒளிரட்டும்
தாளங்கள் அதிரட்டும் தன்னேரிலா இவன் புகழோங்கட்டும்

வாயில்லாதே வந்தவர் இழி மொழி ஈன இந்தி
சேயில்லாத மலடி போல் செத்தே ஒழியட்டும்

காசினி உள்ள வரை கடலும் வானுமுய்யும் வரை
மாசிலாத் தமிழ்க் கண்ணதாசன் மரபுக்கவிதை வாழும்

ஆழ்கடலின் அழகு முத்து அருந்தமிழர் தம் அரிய சொத்து
தாழ்விலா தமிழ் மலர்க் கொத்து தண்டமிழாகவன்
கவிதையே வித்து!

என்ன மாதவம் செய்தது இச் சிறுகுடில்!

அண்ணல் காந்தி அடிகள், ஒருமுறை அமராவதி புதூரில் உள்ள தமிழ்க்கடல் இராய. சொ. அவர்களின் இல்லத்திற்கு வருகை புரிந்தார்கள். இராய. சொ. அவர்கள் தம் வீட்டின் முன்பு காந்திஅடிகளை வரவேற்க ஒரு வரவேற்பு வளைவு நிறுவியிருந்தார்கள். அதில் ''என்ன மாதவம் செய்தது இச் சிறுகுடில்!'' என்ற வில்லி பாரதப் பாடல் வரிகள் எழுதப்பட்டு இருந்தன. (கண்ணன் விதுரரின் குடிசைக்கு வருகை தருகிருர். கண்ணனின் வருகைக்கு இந்தக் குடிசை மாதவம் செய்திருக்க வேண்டும் என்ற பொருள்பட ''என்ன மாதவம் செய்தது இச் சிறுகுடில்'' என்று விதுரர் கண்ணனின் வருகையால் பேரானந்தம் அடைந்து கூறுகிருர்.)

வரவேற்பு வளைவைக் கண்ணுற்ற காந்திஅடிகள் அருகில் இருந்த மூதறிஞர் இராஜாஜி அவர்களிடம் ''வரவேற்பு வளைவில் என்ன எழுதியிருக்கிறது?'' என்று கேட்டார். வரவேற்பு வளைவில் எழுதியிருந்ததை இராஜாஜி அவர்கள் விளக்கிச் சொன்னுர்கள். இராய சொ. வீட்டினுள்சென்று சிறிதுநேரம் சென்ற பின்னர் காந்திஅடிகள் இராய. சொ. விடம் ''என் வருகையால் நீ பேறு பெற்றதாகத் தானே எழுதி இருக்க வேண்டும். அதை விடுத்து வீடு தவம் செய்தது என்று ஏன் வரவேற்பு வளைவில் எழுதி இருக்கிருய்?'' என்று வினவினுர். அதற்கு இராய. சொ. அவர்கள் நான் பேறு பெற்றதாக எழுதி இருந்தால் 'தான்' என்ற ஆணவம் வந்து விடும். ஆகவே அஃறிணைப் பொருளில் 'வீடு தவம் செய்தது' என்று நான் பெற்ற பேற்றை வீட்டின் மீது ஏற்றி அவ்வாறு எழுதச் செய்தேன். தமிழில் சமய இலக்கியங்களில் 'தான்' என்ற ஆணவம் வரக்கூடாது என்பதற்காக நல்லது எது நடந்தாலும் அதை அஃறிணைப் பொருட்களின் மீது ஏற்றிச் சொல்வார்கள் என்று விளக்கிக் கூறினுர்கள். இதைக் கேட்ட காந்திஅடிகள் மிகவும் மகிழ்ச்சியுற்று தமிழர் பண்பாட்டைப் பாராட்டினுர். 'தான்' என்ற ஆணவம் வரக்கூடாது என்பதற்காக தமிழ் இலக்கியங்களில் இதுபோன்று கூறியிருப்பதைப் பாராட்டிய காந்திஅடிகள் வேறு மொழி இலக்கியங்களில் இதுபோல் கூறப்படவில்லை என்ருராம்.

—அள. சித. சொ. தெ. சொக்கலிங்கம்

காரைக்குடி

'எல்லெஸ்' இல்லத் திருமணம்

''நகரத்தார் குரல்'' இதழின் துணை ஆசிரியர் ஒக்கூர் திரு. நா. லெ. சுந்தரம் செட்டியாரின் புதல்வன் திருவளர் செல்வன் தங்கமணி M Sc க்கும் கோயமுத்தூர் ஸ்டாண்டர்டு பேப்பர் ஸ்டோர் ஸின் நிர்வாகப் பங்காளர் நடராசபுரம் சிந. ஆறு. சே. நாகப்ப செட்டியார் அவர்களின் புதல்வி திருவளர் செல்வி மணிமேகலை (B. com.) க்கும் நடராசபுரத்தில் 3-2-89 வெள்ளியன்று திருமணம் சிறப்பாக நிகழ்ந்தது.

வாழ்த்தரங்கம்

திருமண விழாவையொட்டி நடராசபுரத்தில் ''நகரத்தார் குரல்'' இதழின் ஆசிரியர் 'மீனாட்சி திருமைந்தன்' 'கலைக் காவலர்' உயர் திரு. வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்கள் தலைமையில் வாழ்த்தரங்கம் நடைபெற்றது. திரு. இராம. அண்ணாமலை இறைவணக்கம் பாட நடராசபுரம் முத்து. உல. சுப. உலகப்பன் அவர்கள் வரவேற்றுப் பேசினார்கள். வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்களின், தலைமை வாழ்த்துரையைத் தொடர்ந்து 'குழந்தைக் கவிஞர்' அழ. வள்ளியப்பா அவர்கள், 'கலைமகள்' இராம. நடராசன் செட்டியார் அவர்கள், ஆர்எம். முத்தழகப்ப செட்டியார் அவர்கள், எஸ். ஒ. ஆர்எம். கணபதிச் செட்டியார் அவர்கள், 'காசிஸ்ரீ' 'பொற்கிழிக் கவிஞர்' அரு. சோமசுந்தரன் அவர்கள், 'பொற்கிழிக் கவிஞர்' பேராசிரியர் சொ. சொ. மீ. சுந்தரம் அவர்கள் 'புலவர் மாமணி' மா. முத்துராமன் அவர்கள் ஆகியோர் வாழ்த்திப் பேசினார்கள். செல்வன் திரு. ஆ. கிருஷ்ணன் வாழ்த்துக்கவி பாடினார். திரு. நா. லெ. சுந்தரம் நன்றி கூறினார்.

மணமக்களுக்கு உயர்திரு வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்களும் 'கலைமகள்' இராம. நடராஜன் செட்டியார் அவர்களும் பொன்னாடை அணிவித்து வாழ்த்தினார்கள்.

வாழ்த்தரங்கில் பங்குபெற்றவர்களுக்கு சிந. ஆறு. சே. நாகப்ப செட்டியார் அவர்களும் முத்து. உல. சுப. உலகப்ப செட்டியார் அவர்களும் திரு. நா. லெ. சுந்தரமும் பொன்னாடை அணிவித்தார்கள்.

திருமண விழாவில் அறிஞர்கள், தொழில் அதிபர்கள், வணிகர்கள், வழக்கறிஞர்கள், கணக்காய்வாளர்கள். மருத்துவர்கள் பல்வேறு துறைகளைச் சார்ந்த நண்பர்கள் பெருமளவில் கலந்து கொண்டு வாழ்த்திச் சிறப்பித்தனர்.

வாழ்த்துச் செய்திகள்

மணமக்களை வாழ்த்தி அண்ணமலைப் பல்கலைக்கழகத்தின் இணைவேந்தர் டாக்டர் எம். ஏ. எம். இராமசாமி அவர்கள், துணைவேந்தர் பேராசிரியர் ஆர்எம். சேதுநாராயணன் அவர்கள் சென்னை ஸ்மால் காஸ் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி என். பழநியப்பன் அவர்கள் 'இலக்கியச் சிந்தனை' திரு ப. லெட்சுமணன் தொழிலதிபரும் மதுரை நகரத்தார் சங்கத்தின் தலைவருமான திரு. லெ. நாராயணன் செட்டியார் திருச்சி நகரத்தார் சங்கத்தின் தலைவர் திரு. எல். என். லெட்சுமணன் செயலாளர் திரு. எஸ்பி. அருணாசலம் கரூர் நகரத்தார் சங்கத்தின் தலைவர் திரு. சுப. அருணசலம் ''கல்கண்டு'' இதழின் ஆசிரியர் திரு. லேனா தமிழ்வாணன், திரு ரவி தமிழ்வாணன், ''நகரத்தார் மலர்'' ஆசிரியர் திரு. நா. இளங்கோவன் ''நகரத்தார் இதழ்'' ஆசிரியர் திரு. சுப. செந்தமிழன் முனைவர் திரு. வ. சுப. மாணிக்க

ஞர், முனைவர் திரு. அர. சிங்கார வடிவேலன், முனைவர் திரு. ஆறு. அழகப்பன் முனைவர் திரு. இராம. சுந்தரம் முனைவர் திரு. தி. இராச கோபாலன் முனைவர் செல்வி மணி அருள்நந்தி ஜெமினி கலர் லாப ரட்டரி நிர்வாக இயக்குநர் திரு. பழநியப்பன் இராமசாமி, 'வானதி' திரு. ஏ. திருநாவுக்கரசு சக்தி ஃபைனான்ஸ் பொது மேலாளர் திரு. கண. சிற்சபேசன், ஒட்டல் ஒசியானிக் உரிமையாளர் திரு. எம். எஸ். மெய்யப்பன் 'வயலின் மேதை' திரு. குன்னக்குடி வைத்தியநாதன் கவிஞர் திரு. செல்லகணபதி சௌத் இந்தியா கார்ப்பரேஷன் பி. லிட் பொது மேலாளர் திரு. ஆர்எம். ரெங்கநாதன் செட்டியார், மேலாளர் திரு எல் சண்முகம் செட்டியார், செட்டிநாடு சிமெண்ட் நிர்வாக இயக்குநர் திரு டி. தேனப்ப செட்டியார், ஸ்ரீவிசாலம் சிட் பண்ட் நிர்வாக இயக்குநர் திரு. ஆர்எம். அருணாசலம், 'அறமனச் செம்மல்' திரு. சோம, இயற்பகை செட்டியார், திரு. நாக. இராம. இராமசாமிச் செட்டியார் கோவை கற்பகம் சினிகாம்ப்ளெக்ஸ் தலைவர் கோனு பட்டு திரு எஸ் சுப்பையா செட்டியார், தேவகோட்டை சேவுகன் அண்ணாமலைக் கல்லூரி நிறுவனர் திரு. சேவு. அண. அண்ணாமலைச் செட்டியார், திரு. ஏஎல். ஏஆர். எஸ்எம் நாராயணன் செட்டியார். மேலைச்சிவபுரி திரு. அ. சொ. சிவப்பிரகாசம் போன்ற நூற்றுக் கணக்கானோர் வாழ்த்துச் செய்திகளை அனுப்பியிருந்தனர்.

புலவர்மாமணி மா. முத்துராமன் இல்லத் திருமண விழா

'புலவர்மாமணி' திரு. மா. முத்துராமனின் புதல்வி செல்வி மாணிக்கவல்லி என்ற சாந்திக்கும் திரு. சொ. சண்முகம் செட்டியாரின் புதல்வன் செல்வன் சொக்கலிங்கத்திற்கும் மேலைச்சிவபுரியில் திருமணம் 10-2-89 அன்று வெகு விமரிசையாக நடைபெற்றது.

சிவானந்த சுவாமிகள் அவர்கள் தலைமையில் இன்னிசைச் சொற்பொழிவு நடைபெற்றது. திரு. இராமசுவாமி வரவேற்றார். பேராசிரியை டாக்டர் சரஸ்வதி இராமனாதன் ''மீனாட்சி கல்யாணம்'' எனும்தலைப்பில் இன்னிசைச் சொற்பொழிவு நிகழ்த்தினார். ஸ்ரீ விசாலம் சிட் பண்ட் முதுநிலை மேலாளர் திரு. இராம. சிதம்பரம் செட்டியார், பூம்புகார் திரு. அரங்கநாத பிள்ளை ஆகியோர் வாழ்த்தினார்கள்.

அடுத்து நடந்த வாழ்த்தரங்கிற்கு 'மீனாட்சி திருமைந்தன்' திரு. வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்கள் தலைமை தாங்கினார்கள். 'கலைமகள்' இராம. நடராஜன் செட்டியார் அவர்கள் தொடக்கவுரையும் வாழ்த்துரையும் வழங்கினார்கள் கவியரங்கிற்கு 'காசிஸ்ரீ' திரு அரு. சோம சுந்தரன் தலைமை தாங்கினார். கவிஞர் சேதுஅருணாசலம் கவிஞர் முனைவர் சபா. அருணாசலம். கவிஞர் நா. மீனவன் கவிஞர் இராம. அண்ணாமலை 'தாலாட்டுக்கவிஞர்' T. குமரப்பன் ஆகியோர் கவிதை பாடினார்கள். நிறைவாக 'பொற்கிழிக்கவிஞர்' திரு. சொ. சொ. மீ சுந்தரம் வாழ்த்துரை வழங்கினார். பற்பல ஊர்களிலிருந்து நகரத்தார் சங்கத்தார்களும், பிரமுகர்களும், அறிஞர் புலவர் பெருமக்களும் வருகை தந்திருந்தார்கள். விழாவில் பங்கேற்ற புலவர் பெருமக்கட்கு திரு இராம. முத்துராமன் செட்டியார் பொன்னாடை போர்த்தினார். புலவர் மாமணி திரு. மா. முத்துராமன் நன்றி கூறினார்.

எண்ணெய் நீராடல்

எண்ணெய் தேய்த்துக் குளிப்பது பற்றி நவீன மருத்துவத்தில் பலவித சர்ச்சைகள் உண்டு ஆனால் நமது முன்னோர்கள் சித்த ஆயுர்வேத மருத்துவ முறைப்படி எண்ணெய் தேய்த்துக் குளிக்கும் முறையைக் கடைப்பிடித்து வந்துள்ளார்கள்.

எண்ணெய் தேய்த்துக் குளிப்பதால் மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய உடலின் பாகங்கள் பெரிதும் வலிமையடைகின்றன.

குரல் வளமடைகிறது. தலைவலி நீங்கிக் கண்கள் குளிர்ச்சியடைகின்றன. உடல் வறட்சியையும் அழுக்கையும் போக்குகிறது.

வாரத்தில் இருமுறை-ஆண்கள் புதன், சனிக்கிழமைகளிலும், பெண்கள் செவ்வாய், வெள்ளிக்கிழமைகளிலும் எண்ணெய் நீராடலாம் என்று வகுத்துள்ளனர்.

தமிழ்நாட்டில் பெரும்பாலும் எண்ணெய்க் குளியலுக்கு நல்லெண்ணெய்யைத் தான் பயன்படுத்துகிறோம். ஆனல் கேரளத்தில் தேங்காய் எண்ணெய்யையே பயன் படுத்துகின்றனர்.

ஆக, எண்ணெய் தேய்த்துக் குளிப்பதனுல் உடல்வலி, உளைச்சல் நீங்குகிறது. முதுமை அணுகாமல் இளமை பாதுகாக்கப் பெறுகிறது.

கண்கள் குளிர்ச்சிபெற்று பார்வை தெளிவாகிறது. உடல் வலிமை பெற்று ஆயுள் நீடிக்கிறது உடலில்சேரும் மிகுதியான வெப்பம் நீங்கி நல்ல தூக்கம் ஏற்படுகிறது நெஞ்சில் சேரும் கபமும், பல நோய்களும் தடுக்கப் பெறுகின்றன சோர்வு அகற்றப் பெறுகிறது.

சீகைக்காய்த் தூள், உசிலம் பட்டைத்தூள், இலுப்பைப் புண்ணாக்கு இவற்றில் ஏதேனும் ஒன்றைக் கொண்டு எண்ணெய் நீராடலாம்.

— பழ வள்ளியப்பன்
தஞ்சாவூர்

பந்தலிலே பாகற்காய்!

ஒரு வீட்டிற்குத் துக்கம் விசாரிப்பதற்காக ஒரு தாயும் அவள் மகளும் சென்றாகள். அந்த வீட்டின் முகப்பு வாசலில் பாகற்காய் பந்தல் இருந்தது. அதில் பாகற்காய் இருப்பதை இருவரும் கவனித்துவிட்டு உள்ளே சென்றார்கள் கணவனை இழந்த அந்த வீட்டுப் பெண்ணிடம் துக்கம் விசாரித்துவிட்டு அந்தப் பெண்ணைக் கட்டிக்கொண்டு ஒப்பாரி வைத்துத் தாயும்மகளும் அழுதார்கள். ஒப்பாரியின் ஊடே மகள் ''பந்தலிலே பாகற்காய்'' என்றாள். (பந்தலில் காய்த்திருக்கும் பாகற்காயை பறித்துச் செல்வதற்காக தாய்க்கு அதுபற்றி நினைவூட்டினாள்) அதைப் புரிந்து கொண்ட தாயும் ஒப்பாரியின் ஊடே ''போகையிலே பார்த்துக்கலாம்'' என்று அழுதுகொண்டே கூறினள். தாய் மகள் இருவரின் எண்ணத்தைப் புரிந்துகொண்ட அந்த துக்கவீட்டுப்பெண் அவளும் ஒப்பாரியின் ஊடே ''அதை விதைக்கல்லவோ விட்டிருக்கேன்'' என்று அழுதுகொண்டே கூறினளாம்.

— அள. சித. சொ. தெ.
சொக்கலிங்கம்
காரைக்குடி.

இன்னர்வீல் சங்கத்தில் பொங்கல் விழா

காரைக்குடி இன்னர்வீல் சங்கத்தில் பொங்கல் விழா 14-1-89 அன்று காரைக்குடி நகராட்சி வாய்பேசாதோர், காதுகேளாதோர் பள்ளியிலும், சிறுவர் சீர்திருத்த நிலையத்திலும் நடைபெற்றன. அது சமயம் மேற்கண்ட பள்ளியிலும், சீர்திருத்த நிலையத்திலும், உள்ள சிறுவர்களுக்கு சர்க்கரைப் பொங்கலுடன் மதிய உணவு, இனிப்பு, பழம், கரும்பு முதலானவற்றை சங்கத்தின் தலைவி, டாக்டர் அலைன் செல்லப்பாவும் செயலர் நாச்சம்மை கருப்பஞ் செட்டியும் வழங்கினர்.

பிள்ளையார்பட்டியில் கூட்டுத் திருமணங்கள்

நாட்டுக்கோட்டை நகரத்தார்களின் ஆதரவில் திருச்சி நகரத்தார் சங்கத்தின் முயற்சியில் பிள்ளையார்பட்டியில் 10-2-89 வெள்ளிக்கிழமையன்று நம்மில் வசதிக் குறைவான குடும்பங்களைச் சேர்ந்த ஒன்பது பெண்களுக்குத் திருமணங்கள் சிறப்பாக நடைபெற்றன.

பள்ளத்தூர் அ. சொ. அண. சோலையப்ப செட்டியாரின் புதல்வி செல்வி உமையாளுக்கும் கொ. லெட்சுமிபுரம் சுப. இராமசாமிச் செட்டியாரின் புதல்வன் செல்வன் ஆறுமுகத்திற்கும்—

காரைக்குடி நா. பழ. அரு. பழநியப்ப செட்டியாரின் புதல்வி செல்வி கமலாம்பாளுக்கும் நடராஜபுரம் மூ. ஆத. நடராஜன் செட்டியாரின் புதல்வன் செல்வன் சுப்பிரமணியனுக்கும்—

அரிமளம் நா. செல்லப்ப செட்டியாரின் புதல்வி செல்வி அழகம்மைக்கும் அரிமளம் சொ. பழநியப்ப செட்டியாரின் புதல்வன் செல்வன் சுப்பிரமணியனுக்கும்—

அரிமளம் சொ. பழநியப்ப செட்டியாரின் புதல்வி செல்வி தெய்வானைக்கும் அரிமளம் நா. செல்லப்ப செட்டியாரின் புதல்வன் சேவுகன் என்கிற சேகருக்கும்—

அரிமளம் மு. சிவ. பழ. சிவராமன் செட்டியாரின் புதல்வி செல்வி முத்துக்கருப்பிக்கும் புதுவயல் ராம. சித. இராமசாமிச் செட்டியாரின் புதல்வன செல்வன் பெரியகருப்பன் என்கிற கணேசனுக்கும்—

தேவகோட்டை வெ. சோமசுந்தரம் செட்டியாரின் புதல்வி செல்வி மீனாட்சிக்கும் காரைக்குடி சொ லெட்சுமணன் செட்டியாரின் புதல்வன் செல்வன் செந்தில் நாதனுக்கும்—

நாச்சியாபுரம் பழ. கரு. நாச்சியப்ப செட்டியாரின் புதல்வி செல்வி சௌந்தரம் என்கிற சகுந்தலாவுக்கும் நாட்டரசன் கோட்டை கண. க. ராம. கதிரேசன் செட்டியாரின் புதல்வன் செல்வன் லெட்சுமணனுக்கும்—


அரண்மனை சிறுவயல் கா. திருநாவுக்கரசு செட்டியாரின் புதல்வி செல்வி தேன்மொழிக்கும் அரண்மனை சிறுவயல் சுப. சுப. மாணிக்கம் செட்டியாரின் புதல்வன் செல்வன் சுப்பிரமணியனுக்கும்—

அரண்மனை சிறுவயல் சுப. சுப. மாணிக்கம் செட்டியாரின் புதல்வி செல்வி மீனாட்சிக்கும் அரண்மனை சிறுவயல் கா. திருநாவுக்காசு செட்டியாரின் புதல்வன் செல்வன் காசிவிசுவநாதனுக்கும்—

ஆக ஒன்பது திருமணங்கள் சிறப்பாக நிகழ்ந்தன.

மணவிழா வாழ்த்தரங்கிற்கு திருச்சி நகரத்தார் சங்கத்தின் தலைவர் எல். என். லெட்சுமணன் அவர்கள் தலைமை தாங்கி அனைவரையும் வரவேற்றுப் பேசினார்கள்.

காரைக்குடித் தொகுதி சட்டமன்ற உறுப்பினரும் திரைப்பட இயக்குநருமான திரு. இராம. நாராயணன், அரண்மனை சிறுவயல் ஊராட்சி மன்றத் தலைவர் திரு. லெட்சுமணன், கண்டவராயன்பட்டி ஊராட்சி மன்றத் தலைவர் திரு. நா. அருணாசலன் அரிமளம் திரு. கணபதி செட்டியார் திரு. எல். சபாரத்தினம் செட்டியார் காரைக்குடி நகரத்தார் நற்பணி மன்றத்தலைவர் திரு. இராமசாமி ஆகியோர் மணமக்களை வாழ்த்தியும் இக்கூட்டுத் திருமணங்களுக்கு பண உதவி செய்து வருபவர்களையும் திருமண ஏற்பாடுகளை முன்னின்று செய்து வரும் திருச்சி நகரத்தார் சங்கத்தின் நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்களையும்-குறிப்பாக பெண் உறுப்பினர்களின்



பிள்ளையார்பட்டியில் 10-2-89 அன்று நிகழ்ந்த ஒன்பது கூட்டுத் திருமணங்களின்போது எடுக்கப் பெற்ற படம். மணமக்களுக்கு நடுவே திருச்சி நகரத்தார் சங்கத்தின் தலைவர் திரு எல். என். லெட்சுமணனும் செயலாளர் திரு எஸ்பி அருணாசலமும் உள்ளனர்.

சேவைகளையும் பாராட்டிப் பேசினார்கள். செயலாளர் திரு. எஸ்பி. அருணாசலம் நன்றி தெரிவித்தார்.

பிள்ளையார்பட்டி கற்பக விநாகர் கோவிலின் அறங்காவலர்கள் இத்திருமணங்களுக்கு வேண்டிய அனைத்து உதவிகளையும் செய்து கொடுத்தனர். காரைக்குடி மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகத்தினரும் நகராட்சியினரும் லாரிகளில் இலவசமாக குடிநீர் வழங்கி உதவினார்கள்.

ஈரோடு இளைஞர் சங்கம்

ஈரோடு நாட்டுக்கோட்டை நகரத்தார் இளைஞர் சங்கத்தின் 2ஆம் ஆண்டு விழா அதன் தலைவர் திரு. என். எஸ் எஸ். செந்தில்நாதன் தலைமையில் 5-2-89 அன்று நடைபெற்றது. துணைத்தலைவர் திரு. மு. சுப்பையா செட்டியார் வரவேற்றார். மற்றொரு துணைத்தலைவர் திரு. முத்து கணேசன் அறிக்கை வாசித்தார். அது சமயம் இளைஞர்களின் பேச்சுப் போட்டியும், கவிதைப் போட்டியும் நடைபெற்றன.

திருவாளர்கள் காளை கணேசன், திருமலை அழகன், மா. பழ. மயாண்டி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். 'புலவர் மாமணி' மா. முத்துராமன் அவர்கள் 'காவியத் தாயின் இளைய மகன்' என்னும் தலைப்பில் சிறப்புரை ஆற்றினார்கள்.

போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கப் பெற்றன. முடிவில் சங்கத்தின் துணைச் செயலாளர் திரு. மா. லெட்சுமணன் நன்றி கூறினார்.

திருமணம்

நற்சாந்துபட்டி கும. சித. நடராஜன் செட்டியார் அவர்கள் புதல்வன் செல்வன் சிதம்பரம் என்ற கணேசனுக்கும் செவ்வூர் பெரி. பழ. திருநாவுக்கரசு செட்டியார் அவர்கள் புதல்வி செல்வி ஏகம்மை என்ற உஷாவுக்கும் 27-1-89 அன்று செவ்வூரில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

சேதுநாராயணன் தாயகம் திரும்பினர்

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் பேராசிரியர் ஆர்எம். சேதுநாராயணன் அவர்கள் 19-1-89 அன்று அமெரிக்க நாடு புறப்பட்டுச் சென்று. வாஷிங்டன் நகரில் கட்டுமானத் துறை குறித்த கருத்தரங்கில் கலந்து கொண்டு ஆய்வுக் கட்டுரை ஒன்றை வழங்கியிருக்கிறார்கள். இவர்கள் அமெரிக்க நாட்டில் நியுயார்க், டாம்பா,



சான்பிரான்ஸிஸ்கோ, லாஸ் ஏஞ்சல்ஸ் ஆகிய நகரங்களுக்கும் மற்றும் இங்கிலாந்து நாட்டிலுள்ள இலண்டன் மாநகருக்கும் அங்குள்ள பல்கலைக் கழகங்கள், பொறியியல் துறைகள் வணிகவியல் நிர்வாகத் துறைகள் சுற்றுப்புறச் சூழல் மையங்கள், தொலைதூரக் கல்வி மையங்கள் ஆகியவற்றில் ஏற்பட்டிருக்கும் முன்னேற்றங்களை நேரில் கண்டறிந்து தமது மூன்று வார கால பயணத்தை முடித்துக் கொண்டு 11-2-89 அன்று நலமாகத் தாயகம் திரும்பினர்கள்.

நகரத்தார் புத்தக வங்கி

நம் சமூக, கல்லூரி மாணவர்களுக்காக மதுரை நகர விடுதியில் 2-10-88 முதல் நகரத்தார் புத்தக வங்கி சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. இவ்வங்கியில் கிடைத்தற்கரிய பல நூல்களும் அதிக விலைமதிப்புள்ள நூல்களும் இடம் பெற்றுள்ளன. இந்த வங்கியின் மூலம் தற்போது பல மாணவ, மாணவிகள் பயன் பெற்று வருகின்றனர்.

இவ்வங்கியில் இன்னும் உறுப்பினா ஆகாமல் இருக்கும் மாணவ, மாணவிகள் உறுப்பினர் ஆகிப் பயன் பெறுமாறு இவ்வங்கியின் தலைவர் திரு பழ. இராமசாமி கேட்டுக் கொண்டுள்ளார். உறுப்பினர் படிவம் நகர விடுதியில் ஒவ்வொரு ஞாயிறும் மாலை 3 மணி முதல் 5 மணி வரை கிடைக்குமென்றும் நுழைவுக் கட்டணம் ரூ. 10-00ம் திரும்பப் பெறும் காப்பீட்டுத் தொகை ரூ. 30-00ம் செலுத்தி உறுப்பினர் ஆகலாமென்றும் உறுப்பினர் ஒவ்வொருவரும் 2 நூல்கள் வீதம் எடுத்துச் சென்று புதுப்பித்தலுக்கு உட்பட்டு தேவைப்படும் வரை வைத்துக் கொள்ளலாம் என்றும் தெரிவித்துள்ளார்.

மணி விழா

பெங்களூரில் உள்ள கர்நாடக மாநில நகரத்தார் சங்கத்தின் செயலாளர் கண்டனூர் தெ. ராம. லெ ராம. சுப்பிரமணியன் செட்டியார் அவர்களுக்கும் மேற்படியார் மனைவி திருமதி கல்யாணி ஆச்சி அவர்களுக்கும் கண்டனூரில் 60ஆம் ஆண்டு நிறைவு மணிவிழா 6-1-89 அன்று சிறப்பாக நடைபெற்றது. அவ்வமயம் 'சிந்தனைக் கவிஞர்' திரு. பெரி. சிவனடியான் 'மக்கள் கவிஞர்' திரு. அரு. நாகப்பன் பெங்களூர் தொழிற் சங்கத் தலைவர் திரு. ஆர். ஏ. செல்வராஜ், காஷ்மீரிலிருந்து வந்திருந்த திரு. எம். எல். ஷராப் முதலானோர் வாழ்த்துரை வழங்கினர்கள்.



செய்திகள் வாசிப்பவர்...

எல். சுந்தரம்

ஃ அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் ஆர் எம். சேதுநாராயணன் அவர்கள் அண்மையில் திருச்சி வானொலியில் 'வளர்தமிழ்' என்ற தலைப்பில் உரையாற்றினார்கள். அதன் விரிவாக்கம் ஒரு நூலாக வெளியிடப் பெற்றுள்ளது.

ஃ வேந்தன்பட்டியைச் சேர்ந்த திரு வி. மூத்துராமன் பஞ்சாப் மாநிலம் பாட்டியாலாவில் 'நார்த் ஸோன் க சுரல் சென்டர்' நடத்திய புகைப்படப் போட்டியில் கலந்து கொண்டு முதல் பரிசாக ரூ. 10,000/- பெற்றுள்ளார்.

ஃ 1987ல் வெளியான தமிழ் நூல்களில் 19 பிரிவுகளுக்கு முதல் பரிசும் இரண்டாவது பரிசுமாக மொத்தம் 38 பரிசுகளைத் தமிழக அரசு வழங்குகிறது. அதில் குழந்தை இலக்கியப் பிரிவில் வானதி திரு. ஏ. திருநாவுக்கரசு எழுதிய ''சின்னத்தம்பியின் பெரிய உள்ளம்'' என்ற நூல் இரண்டாவது பரிசான ரூ. 1000/- பெறுகிறது.

ஃ மதுரை நகரத்தார் புத்தக வங்கியின் தலைவரும் சட்டக் கல்லூரி மாணவருமான திரு. பழ. இராமசாமியின் தலைமையில் 3 ஆவது அமைதிச் சைக்கிள் பேரணி ஒன்று 11-2-89 முதல் 17-2-89 வரை மதுரையிலிருந்து கன்னியாகுமரி சென்று வந்தது.

ஃ பிள்ளையார்பட்டி அருள்மிகு கற்பக விநாயகர் கோயிலில் 3-2-89 அன்று பேரறிஞர் அண்ணா நினைவுநாளை ஒட்டி அவர் ஆத்மா சாந்தி பெற பகல் 11 மணிக்குச் சிறப்பு வழிபாடு செய்யப் பெற்று ஆயிரம் பேருக்கு அன்னதானம் வழங்கப்பெற்றது.

ஃ ஒசூரில் 1-1-89 ஆங்கில ஆண்டுப் பிறப்பன்று ஸ்ரீவரசித்தி விநாயகர் கோயிலில் ஸ்ரீதெண்டாயுதபாணிக்கு அன்னதானப்பூஜை நடைபெற்றது. அவ்வமயம் நகரத்தார் மாதர் மன்றமும் தொடங்கப்பெற்றது.

ஃ தேவகோட்டை கைலாசநாதபுரத்தில் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் 22-3-89 அன்று பங்குனி உத்திரத் திருவிழா நடைபெறஉள்ளது. அதனையொட்டி பாலர் அரங்கமும் வழக்காடு மன்றமும் நடைபெற உள்ளன.

ஃ தேவகோட்டை ஸ்ரீ இராம கிருஷ்ண வித்யாலயத்தில் 17-2-89 அன்று பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ண பரஹம்சரின் 154 ஆவது பிறந்த தினம் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது.

ஃ நகரத்தார் பக்தி நெறி மன்றத்தின் சார்பாக மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் உள்ள தெண்டாயுதபாணி சுவாமிக்கு 12-2-89 அன்று சிறப்பு கூட்டு வழிபாடு நடைபெற்றது.

ஃ மதுரை மாவட்ட மருந்து வியாபாரிகள் சங்கத்தின் செயற்குழு உறுப்பினராகவும் அச்சங்கத்தின் சட்டக்குழு உறுப்பினராகவும் தமிழ்நாடு மாநில மருந்து வியாபாரிகள் சங்கச் செயற்குழு உறுப்பினராகவும் மேலைச்சிவபுரியைச் சேர்ந்த திரு. பழ. இராமசாமி தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

அமரர் இராயவரம் இராம. சீனிவாசன்


நகரத்தார்களிலே அன்பாலும், பண்பாலும், தொண்டுகளினாலும், தெய்வப் பணிகளினாலும் சிறந்து விளங்கிய பலருள், அமரர் இராயவரம் இராம. சீனிவாசன் செட்டியார் அவர்களும் ஒருவர்.

இவர்களது தந்தையார் அரு. சா. இராமன் செட்டியார் அவர்கள் பர்மாவில் பல ஆண்டுகள் வாழ்ந்தவர்கள். அங்கு 'நத்தலின்' என்ற ஊரில் செல்வாக்கோடு வாழ்ந்த காரணத்தால் 'நத்தலின் ராஜா' என அழைக்கப் பெற்றவர்கள். அங்கு பெரிய அளவில் மர அறுவை ஆலையை நடத்தியவர்கள்.

தந்தையாரோடு பல ஆண்டுகள் பர்மாவில் இருந்த சீனிவாசன் செட்டியார் அவர்கள் பின்னர் தம் சொந்த ஊரான இராயவரம் திரும்பினார்கள். உயர்நிலைப்பள்ளியை எட்டிப் பார்க்காத படிப்பு இவருடையது என்றாலும், பல முனைவர் பட்டம் பெறக்கூடிய அறிவுச் செம்மல் இவர்கள்.

இராம. சீனிவாசன் செட்டியார் அவர்கள் காந்தியவாதி. எனவே ஏழைஎளியவர்களின் மேல்நிலை பற்றியே சிந்தித்தார்கள். பசிப் பிணியால் அல்லலுற்ற அரிசனங்கள் ஒளிமிகுந்த இவர் கண்களில் குடியிருப்போராயினர். அரிசனங்கள், மற்றும் ஏழை மக்களுக்காக இவர்கள் இராயவரத்தில் 'ஸ்ரீ முத்துமாரி அம்மன் கைத்தொழில் கிராமக்கூட்டுறவு சங்கம்' என்ற அமைப்பை நிறுவி கைக்குத்தல் அரிசியை உற்பத்தி செய்தார்கள். உற்பத்தி அளவு அதிகரித்துவிட திருப்பராயத்துறை தபோவனத்தைச் சேர்ந்த சித்பவானந்த அடிகளையும் புதுக்கோட்டை சிறைச் சாலையையும் அணுகி அரிசியை விற்கஆவன செய்தார்கள். நாட்டுச் செக்கு மூலம் நல்லெண்ணெய் உற்பத்தியையும் தொடங்கி பலருக்கு வேலை வாய்ப்புக்கு உதவினார்கள்.

ஏழை மக்கள் இவர்களிடம் காட்டிய அன்பிற்கு ஈடு இணை கிடையாது. பொங்கல், தீபாவளி போன்ற திருநாட்களில் இவர்கள்



ஏழை எளியவர்களுக்கு இலவசமாக புத்தாடைகள் வழங்கினார்கள். மதிய உணவுத் திட்டத்தைத் தொடங்கி அப்போதே ஏழைகளின் பசியைப் போக்கினார்கள்.

அருட்பிரகாச வள்ளலார் வடலூரில் தர்மசாலை தொடங்கி முதலில் பசியைப் போக்கினார்கள். பின்னர் பாடசாலை, ஞான சபையை நிறுவினார்கள். அப்படிப்

யட்ட வள்ளல் பெருமானின் 'எட்டரும் பொருளே' என்று தொடங்கும் திருவருட்பாதரன் இராம. சீனிவாசன் செட்டியார் அவர்களை இவ்வகைத் தொண்டுகளில் ஈடுபடவைத்தது. ஈட்டிய பொருளை ஏழை எளியமக்களுக்கு உதவவேண்டுமென்ற சிந்தனையில் மாறுபடாதஇவர் கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் வேளாண்மைக் கடன்கள் உதவும் துறையிலும் அதிகப் பணிபுரிந்து நலிந்தோர் உள்ளங்களில் நிறைந்து வாழ்ந்தார்கள். இராயவரம் ப. வ குடும்பம் மு அ. மு. குடும்பத்தாருடன் பொருளாதார நட்புக் கொண்டு தொழில்களைப் பெருக்கினார்கள்.

"சக்தி" இதழின் ஆசிரியர் வை. கோவிந்தன் அவர்களது இளவலான இவர்கள் கவியோகி சுத்தானந்த பாரதியாரின் அரிய நூல்கள் பல வெளிவரக் காரணமான பலரில் முக்கியமானவர்கள்.

பங்குனி உத்திரம் என்றால் காரைக்குடியில் வாசம் புரியும் இவர்கள் கம்பன் அடிப்பொடி சா. கணேசனாரின் நெருங்கிய நண்பர். சுதந்திராக் கட்சியின் மேலிட ஆணைக்குக் கட்டுப்பட்டு 1967ல் திருமயம் தொகுதியில் தமிழகச் சட்டமன்றத்திற்குப் போட்டியிட்டார்கள். இராயவரம் தேசிய அளவிலும் தொழில்வள மேம்பாட்டிலும் சிறந்தோங்கியதற்கு இராம. சீ. அவர்களின் தொண்டு முக்கிய காரணமாகும்.

ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திர மேலாண்மைக் கழகத்தின் தலைமைச் செயலாளராகத் தொண்டாற்றிய பெருமைக்குரிய இவர்கள் 31-3-87 அன்று விண்ணுலகம் அடைந்தார்கள்.

இவர்களுடைய துணைவியார் நற்சாந்துபட்டி பிரபல குடும்பமான கபபஞ் செட்டியார் வீட்டில் கும. பெரி. பெரியகருப்பன் செட்டியார் அவர்களது புதல்வியான அழகம்மை ஆச்சி அவர்கள் இவர்களுக்கு திரு இராமசாமி M Sc. என்ற புதல்வரும் ஆறு புதல்விகளும் உள்ளனர். அடக்கமே உருவான, பழகுவதற்கு இனிய திரு. இராமசாமியும் அவரது துணைவியார் திருமதி வள்ளியம்மையும் தந்தையாரைப் போற்றிவந்தது போல் தாயாரையும் போற்றிவருகிறார்கள்.

ஒன்பது நகரக்கோவில்களின் புள்ளி விவரங்கள்!

1.	இளையாற்றக்குடிக் கோவில்	4,555
2.	மாத்தூர்க் கோவில்	4,563
3.	வைரவன் கோவில்	4,868
4.	இரணிக் கோவில்	2,387
5.	பிள்ளையார்பட்டிக் கோவில்	2,962
6.	நேமம் கோவில்	1,428
7.	இலுப்பைக்குடிக் கோவில்	2,407
8.	சூரக்குடிக் கோவில்	1,130
9.	வேலங்குடிக் கோவில்	36
	மொத்தப் புள்ளிகள்	24,336

(பிப்ரவரி 1988 பதிவேட்டில் உள்ளபடி)

—பழ. வள்ளியப்பன், தஞ்சாவூர்

கண்ணுடையநாயகி அம்மன் திருக்கோயிலில் திருக்குட நீராட்டு!

நாட்டரசன்கோட்டை அருள்மிகு கண்ணுடைய நாயகி அம்மன் திருக்கோயிலில் சுக்கில ஆண்டு சித்திரைத் திங்கள் 18உ (1-5-89) திங்கட்கிழமை காலை 9-30 மணி அளவில் திருக்குட நன்னீராட்டு விழா நடைபெற உள்ளது.

25-4-89 அன்று அனுக்ஞை தன பூஜை தொடங்குகிறது. 26-4-89 காலை 9 மணிக்கு கணபதி பூஜை, கணபதி ஓமம். மாலை 4 மணிக்கு வாஸ்து சாந்தி 27-4-89 காலை 9 மணிக்கு நவக்



கிரஹ ஹோமம். மாலை 4 மணிக்கு மிருத் சங்கிரணம், அங்குரார்ப்பணம், ஆச்சாரிய ரக்சாபந்தனம் முதலியன. 28-4-89 காலை 4 மணிக்கு பிரசன்னாபிஷேகம். கலாகர்ஷணம், யாகசாலா பிரவேசம். மாலை 5 மணிக்கு முதல் கால யாக பூஜை. 29-4-89 காலை மாலை யாக பூஜை. 30-4-89 காலையும் மாலையும் யாகபூஜை. இரவு 7 மணிக்கு லெட்சுமி பூஜை 10 மணிக்கு பிம்மசுத்திரஷாபந்தனம் 1-5-89 திங்கள் காலை 5 மணிக்கு யாக பூஜை. 7-30 மணிக்கு மகா பூர்ணாகுதி தீபாராதனை 9மணிக்கு கடம் புறப்படுதல் 9-30 மணிக்கு திருக்குட நீராட்டு விழா அன்று மாலை 4மணிக்கு மகா அபிஷேகம் இரவு 8மணிக்கு அம்மன் வெள்ளி ரதத்தில் உலா வருதல்.

இத்திருக்குட நீராட்டு விழாவிற்கான ஏற்பாடுகளை விழாக் குழுத் தலைவர் ஜி. ஆறுமுகம் செட்டியார் அவர்களும் துணைத் தலைவரும் பொருளாளருமான எஸ் கண்ணப்ப செட்டியார் அவர்களும் செயலாளர் ஆர்.எம். ஓ ஓ. கருப்பையா செட்டியார் அவர்களும் செய்து வருகிறார்கள்.

மேலைச்சிவபுரியில் வழக்காடு மன்றம்

பழனிக்குப் பாதயாத்திரையாகச் சென்று வந்த வேலுக்கும் காவடிகளுக்கும் மேலைச்சிவபுரியில் 31.1-89 அன்று வழிபாடு நடத்தினார்கள். அதனையொட்டி ஒரு வழக்காடு மன்றமும் நடைபெற்றது. வழக்காடு மன்றத்திற்கு நடுவராக 'புலவர்மாமணி' திரு. மா. முத்துராமன் இருக்க, "காரைக்கால் அம்மையார் செயல்கள் பொருத்தமற்றன" என்று திருமதி அலமேலு முகுந்தன் வழக்குத் தொடுக்க அதனை கவிஞர் திரு. சேது அருணாசலம் மறுக்க நடுவர் 'பொருந்தும்' எனத் தீர்ப்பு அளித்தார்.

வேந்தன்பட்டி மீனுட்சிசுந்தரம்

26 வயது இளைஞரான திரு. மீனுட்சி சுந்தரம் படிப்பில் படு சுட்டி. மேலேச்சிவபுரி கணேசர் செந்தமிழ்க் கல்லூரியின் உயர் நிலைப் பள்ளி மாணவரான இவர், 10ஆம் வகுப்பில் மாவட்ட அளவில் (புதுக்கோட்டை மாவட்டம்) அதிக மதிப்பெண்கள் (500க்கு 458) பெற்றதற்காக டி ஐ. சைக்கிள்ஸ் ஆப் இந்தியா நிறுவனத்திலிருந்து சைக்கிள் ஒன்று பரிசாகப் பெற்ருர்.



பத்தாம் வகுப்பில் மாநில அளவில் ஏழாவது இடம் பெற்றதற்காக மத்திய அரசின் நேஷனல் ஸ்காலர்ஷிப் ஸ்கீமிலிருந்து ஸ்காலர்ஷிப்பாக 1980 முதல் 1985 வரை மாதம் ரூ. 250/- விதம் பெற்ருர்.

ஊராட்சி மன்றங்களின் வெள்ளி விழாவையொட்டி மாவட்ட அளவில் நடைபெற்ற பேச்சுப் போட்டியில் ரூ 150/- பரிசு பெற்ருர்.

கோவையில் B. E. production Engg. பயின்று முதல் வகுப்பில் தோர்ச்சியடைந்தார். சென்னை பிரேக்ஸ் இந்தியா லிட் நிறுவனத்தில் சில காலம் பணியாற்றினுர். அமெரிக்க நாட்டில் விச்சிடா மாநிலப் பல்கலைக் கழகத்தில் M. S. (Engg. Management Science) பயில்வதற்கு அனுமதியும் கல்வி நிதி உதவியும் கிடைத்து இவர் ஆகஸ்ட் 88ல் அமெரிக்கா சென்றிருக்கிருர்.

இவர் வேந்தன்பட்டி திரு. தெ. பழ. தெ. தேனப்ப செட்டியார்-திருமதி மங்களம் ஆச்சியின் புதல்வராவார்.

ஒக்கூரில் மணி விழா

ஒக்கூரில் ஆ. கரு. ஆக. மாதவன செட்டியார் அவர்களுக்கும் திருமதி விசாலாட்சி ஆச்சி அவர்களுக்கும் 31-3-89 வெள்ளியன்று ஒக்கூரில் மணிவிழா நடைபெற உள்ளது. அன்று காலை 10-30 மணி அளவில் திருமுறைக் காவலர்' பாகனேரி இராம. முத்துப்பழநியப்ப செட்டியார் அவர்கள் தலைமையில் வாழ்த்தரங்கம் நடைபெற உள்ளது. அதில் வித்துவான் திரு. நீ. சீ. சுந்தரராமன், பொற்கிழிக் கவிஞர் திரு. சொ. சொ. மீ. சுந்தரம் மற்றும் பலர் வாழ்த்துரை வழங்க இருக்கிருர்கள்.

செய்தி!

ஃ காரைக்குடி மெய்யம்மை பதிப்பகத்தின் சார்பாக 23& 24-2-89 ஆகிய இரு தினங்கள் மீனுட்சி ஆச்சியின நினைவுச் சொற்பொழிவு நிகழ்ந்தது பேராசிரியை ச. மெய்யம்மை அவர்கள் 'பட்டினத்தார் நினைவில் நின்ற மூவர்' என்ற தலைப்பில் சிறுத் தொண்டர், திருநீலகண்டர் கண்ணப்பர் ஆகியோர் பற்றிச் சொற்பொழிவாற்றினர்.

ஃ மதுரையில் உள்ள மதுரை இராமநாதபுரம் யுனைட்டெட் பிலிம் டிஸ்ட்ரிபியூட்டர்ஸ் அசோஸியேஷனின் பொருளாளராக 1989 ஆம் ஆண்டுக்கு சாந்தா பிலிம்ஸ் திரு. பி.எல். சிதம்பரம் போட்டியின்றித் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

முனைவர் சிங்காரவடிவேலனுக்கு நல்லாசிரியர் விருது!

தேவகோட்டை ஸ்ரீ சேவுகன் அண்ணாமலை கல்லூரியின் தமிழ்த் துறைத் தலைவர் - பேராசிரியர் முனைவர் அர. சிங்காரவடிவேலன் அவர்களுக்குத் தமிழக அரசின் 1985-86ஆம் ஆண்டிற்கான கல்லூரி நல்லாசிரியர் விருது கிடைத்திருக்கிறது. சென்னை கலைவாணர் அரங்கில் 5-3-89 ஞாயிறு அன்று மாலை நடைபெற உள்ள விழாவில் தமிழகக் கல்வி அமைச்சர் மாண்புமிகு க. அன்பழகன் அவர்கள ரூபாய் ஆயிரம் ரொக்கம் வெள்



ளிப் பதக்கம் சான்றிதழ் ஆகியவற்றை இவருக்கு வழங்கவிருக்கிறார்கள்.

முனைவர் திரு. அர. சிங்காரவடிவேலன் கண்டனூரைச் சேர்ந்தவர். எம். ஏ. பி. டி. படித்தவர். 'சங்க இலக்கிய உவமைகள்' என்ற தலைப்பில் ஆய்வு மேற்கொண்டு 1978ல் மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத்திலிருந்து முனைவர் பட்டம் பெற்றவர். இவர் 1961 முதல் 1964 வரை காரைக்குடி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியிலும் 1964 முதல் 1972 வரை காரைக்குடி அழகப்பா கல்லூரியிலும் பணியாற்றியவர் நல்ல பல நூல்களை எழுதியிருப்பவர். சிறந்த கவிஞர். கவியரங்குகளுக்குத் தலைமை ஏற்றுச் சிறப்பிக்கக் கூடிய ஒரு சிலரில் குறிப்பிடத் தக்கவர். சிறந்த கொள்கை வீரர். சமூக முன்னேற்றத்திலும் சமூக சீர்திருத்தத்திலும் அதிக அக்கறையுடையவர். முனைவர் திரு. வ. சுப. மாணிக்கனாரின் மாணவர். அவருக்கு நமது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கல்லலில் கண்சிகிச்சை முகாம்

காரைக்குடி இன்னர்வீல் சங்கமும் சுழற்குழுவும் மதுரை அரவிந் கண் மருத்துவ மனையும் இணைந்து கல்லல் முருகப்பா மேல்நிலைப் பள்ளியில் 26-2-89 காலை 9 மணி முதல் பகல் 1 மணி வரை கண்சிகிச்சை முகாம் நடத்தின. அம்முகாமில் பத்மஸ்ரீ டாக்டர் ஜி வெங்கடசாமி குழுவினர் தலைமையில் 222 நோயாளிகளுக்கு கண்சிகிச்சை அளிக்கப்பட்டது. அதில் 8 நோயாளிகளுக்கு அறுவைச்சிகிச்சைக்கான உதவிகள் செய்யப்பட்டன கண் சிகிச்சை மருத்துவ முகாமிற்கான ஏற்பாடுகளை இன்னர்வீல் சங்கத் தலைவி அலைஸ் செல்லப்பா, செயலாளர் நாச்சம்மை கருப்பஞ்செட்டி சுழற்குழுத் தலைவர் பால் செல்லப்பா செயலாளர் காசிவிஸ்வநாதன் ஆகியோர் செய்திருந்தனர். இன்னர்வீல் சங்க உறுப்பினர்கள் மீனாட்சி அருணாசலம், வசந்தாள் சுந்தரம் மற்றும் சுழற்குழு உறுப்பினர்களும் இம்முகாமில் கலந்து கொண்டார்கள்.

நகரத்தார் குரல்

விளம்பர விவரம்

அட்டை (வெளிப் பக்கம்)	ரூ. 500-00
அட்டை (உள் பக்கம்)	ரூ. 300-00
முழுப் பக்கம்	ரூ. 150-00
அரைப் பக்கம்	ரூ. 75-00
கால்ப் பக்கம்	ரூ. 40-00

மணமகன் தேவை, மணமகள் தேவை, சுவீகாரம் போன்ற விளம்பரங்கள் பாதிக் கட்டணத்தில் வெளியிடப் பெறும்.

தொடர்ந்து 12 மாதங்களுக்கு மேல் வெளியிடப் பெறும் விளம் பரங்களுக்குக் கட்டணத்தில் சலுகை உண்டு.

மணிவிழா, திருமணச் செய்திகள் ஒளிப்படத்துடன் வெளியிட (அரைப் பக்கம்) கட்டணம் ரூ. 50-00

சந்தா விவரம்

ஓர் ஆண்டு	ரூ. 24-00
டெபாசிட் சந்தா	ரூ. 200-00

ஓர் ஆண்டுக்குக் குறைவான சந்தா ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. சந்தாத் தொகையை M. O. மூலமும் பாங்க் டிராப்ட் மூலமும் அனுப்புபவர்கள் முழு முகவரியுடன் சென்ற ஆண்டு தொகை செலுத்தியதற்கான இரசீதின் எண்ணை அவசியம் குறிப்பிட வேண்டும்.

மேலும் விவரங்களுக்கு:

"நகரத்தார் குரல்"
25 வடக்குச் சித்திரை வீதி,
மதுரை-625 001.

வலையபட்டி பள்ளியில் நிறுவனர் நினைவு நாள் விழா

வலையபட்டி சிதம்பரம் மெட்ரிகுலேசன் மேல் நிலைப் பள்ளியில் நிறுவனர் நினைவு நாள் 19-2-89 அன்று புதுக்கோட்டை மாவட்டக் காவல்துறைத் தலைவர் திரு. டி. இராதாகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது.

அண்ணாமலைப் பல்கலைக் கழக மொழியியல் துறைத் தலைவரும ஆட்சிக் குழு உறுப்பினருமான டாக்டர் ஆறு. அழகப்பன் வரவேற்புரையாற்றினர் பள்ளி முதல்வர் திரு. ஏ. சாமிநாதன் ஆண்டறிக்கை வாசித்தார். ஆடிட்டர் திரு. எஸ். பி சுப்பான் மாவட்டக் காவல்துறை ஆணையருக்குப் பொன்னாடை போர்த்தினர் திரு. ஏ. ஆர் மணி நினைவுப் பரிசு வழங்கினர். விழாவில் 'பொற்கிழிக் கவிஞர்' 'காசி ஸ்ரீ' திரு. அரு. சோமசுந்தரன் டாக்டர் சுவாமிஜயா, 'தாலாட்டுக் கவிஞர்' T குமரப்பன் ஆகியோர் கலந்து கொண்டு நிறுவனருக்கு அஞ்சலி செலுத்தினர்கள். ஆண்டு விழாவில் பரிசு பெற்ற மாணவ மாணவியருக்கு டாக்டர் இராமகிருஷ்ணன் பரிசுகளை வழங்கினர். பேராசிரியர் பி. ஏல் ராமசாமி காவல்துறைத் தலைவருக்கு மாலை அணிவித்தார். குமாரி பிஎல். வள்ளிமயில் திருமதி மீனா இராதாகிருஷ்ணனுக்கு மாலை அணிவித்தார். பொன்னமராவதி பேருராட்சித் தலைவர் திரு. வலம்புரி முத்து நன்றி கூறினர். விழாவில் ஏராளமான பொதுமக்கள் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இயற்கை எய்தினர்

ஆ. தெக்கூர் கருமுத்து அழ. கல்யாண சுந்தரம் செட்டியார் அவர்கள் தமது 96ஆவது வயதில் இயற்கை எய்தினர்கள். இவர்கள் சிக்கல் சிங்காரவடிவேலர் ஆலயத்தில் பல ஆண்டுகள் நிர்வாக தர்மகர்த்தாவாகச் சேவை செய்தவர்கள். திருமணத்தில் பெண்ணுக்கு வயதானவர்கள் தாலி கட்ட வேண்டும் என்று இருந்த முறையை மாற்றி முதன் முதலாக இவர்களே தாலிகட்டி நம் சமூகத்திற்கு நல்வழி காட்டியவர்கள்.

கண்டவராயன்பட்டி பெரி. சோம. சோமசுந்தரம் செட்டியார் அவர்களின் துணைவியார் திரு பதி தாசசம்லைய ஆச்சி அவர்கள 6-2-89 அன்று இயற்கை எய்தினர்கள்.

ஒரு வாசகரின் வேண்டுகோள்

நகரத்தார் இனத்தைச் சேர்ந்தவர்கள் தங்கள் பெயர்களுக்கு முன்னால் இனிஷியலை எழுதும்போது- அதாவது தந்தையார்- பாட்டனார் பெயர்களின் முதல் எழுத்தைமட்டும் எழுதாமல் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்துக்களை எழுதுகிறார்கள். உதாரணமாக இராமநாதன் செட்டியார் புதல்வன் வயிரவன் என்பதை இராம. வைரவன் எனவும் RM. Vairavan எனவும் எழுதுகிறார்கள். அது ரா வைரவன் அல்லது R. Vairavan என்று இருக்க வேண்டும். அவ்வாறு இருந்தால் வங்கிகள் மற்றும் அலுவலகங்களில் எழுதுவதற்குச் சௌகரியமாகவும் குழப்பம் இல்லாமலும் இருக்கும்.

எங்கள் வீட்டிலும் இனிஷியல் பழைய மாதிரியே கடைப்பிடிக்கப் பட்டுவந்தது. இப்போது மாற்றிக் கொண்டோம். அவ்வாறே எல்லோரும் மாற்றிக் கொண்டால் எல்லோருக்குமே நலம் பயக்கும்.

கு. லெட்சுமணன், கோட்டையூர்



சித்தம் மகிழ வந்த செங்கரும்பே!

மீ. சுசீலா, காரைக்குடி

தமிழே வனக்கிளியே தங்கமணிப் பூச்சரமே
அமுதூறும் வாயுடைய அஞ்சுகமே கண்வளராய்
வைரச் சரங்கோர்த்து வண்ணமணித் தொங்கலிட்டு
ஐயா செய்துவைத்த அலங்காரத் தொட்டிலிலே
தூங்குகிற கண்மணியே தோள்வளரும் சித்திரமே
சித்தம் மகிழவந்த செங்கரும்பே கண்வளராய்
ஆத்தாள் மடிமேலும் அம்மான்மார் தோள்மேலும்
இருந்து விளையாடும் எங்கள் பெருந்தனமே
செந்தூரான் துணையிருக்கச் சீமைக் கடல்தாண்டி
கடைபார்த்துக் கணக்கெழுதிக் கட்டிவந்த பொன்னாலே
செய்துவைத்த தங்கநகை சீதனமாய் நான்தருவேன்
அணில்கோதா மாம்பழமே ஆத்தா நீ கண்வளராய்
கையிலே வளைபூட்டிக் கண்ணுக்கு மையுமிட்டு
சின்னக் குழல்வாரிச் சிங்காரக் கொண்டையிட்டு
நிலாப்போலக் காணுகிற நெத்தியிலே பொட்டுவச்சு
காதிலே தொங்கலிட்டுக் காலுக்குச் சலங்கைகட்டி
அலங்காரஞ் செய்தபடி அட்டணக்கால் போட்டிருக்கும்
தங்கமே கண்வளராய் தாமரையே கண்வளராய்

பெருமைக்குரிய ஆச்சிமார்களே! உங்களது தாலாட்டுப் பாடல்களை, தாலாட்டுப் பகுதி ''நகரத்தார் குரல்'' 25, வடக்குச் சித்திரை வீதி, மதுரை-625 001 என்ற முகவரிக்கு அனுப்பி உதவுங்கள். அது பலருக்கும் பயன்படட்டும்.

உங்கள் குரல்

" நகரத்தார் குரல் " வர வர ஓங்கி ஒலிக்கிறது. பிப் '89 இதழில் வெளியான காரைக்குடி திரு. எம். என். நாராயணனின் பிள்ளை வரம் வேண்டிய பாடல் மிக அருமை. அதைப் படித்த நானும் என் மனைவியும் எங்களை மறந்து அழுதுவிட்டோம். இப்பொழுது என் மனைவி பூஜை அறையில் தினமும் அப்பாடலைப் பாடி வருகிருள். 'ஓடி விளையாட ஒரு சந்தானம் இல்லையேல் உறு பயன் நிறைவாகுமோ?' என்ற பாடல் வரிகள் இல் வாழ்வின் அவசியத்தை உணர்த்துகின்றன. பாராட்டுக்கள்.

கவிஞர் வி. கே. கஸ்தூரிநாதன்
குழிபிறை

பிப்ரவரி '89 இதழில் வெளிவந்த திரு. மு. நா. நாராயணனின் பாடல் பிள்ளை இருப்பவர்களுக்குப் பெருமையையும் இல்லாதவர்களுக்கு ஏக்கத்தையும் தரும்படி உள்ளது. சாதனை வீரர் திரு. ஆனந்த நடராஜனுக்கு எனது வாழ்த்துக்கள்.

முனைவர் சுப அண்ணாமலை அவர்களின் கட்டுரை நம் இனத்தவரைச் சிந்திக்கத் தூண்டியுள்ளது. அந்த ஆறு ஆலோசனைகளை வரதட்சணைக்கு மூலகாரணமாக இருந்த செல்வந்தர்களே தங்கள் வீட்டுத் திருமணங்களில் பின்பற்றினால் நடுத்தரக் குடும்பத்தினர் தாங்களாகவே திருந்தி விடுவார்கள்.

செல்வி
எஸ். விஜயலெட்சுமி. பி ஏ.,
சென்னை

தங்கள் பிப்ரவரி இதழில் அழ. வள்ளியப்பா அவர்களைப் பற்றித் துணுக்கு வந்துள்ளது. அவர்களுடைய புதல்வன் பரோடாவில் பொறியாளராகப் பணியாற்றி வருகிருர் என்கிற செய்தியையும் அத்துணுக்கில் சேர்த்திருந்தால் செய்தி முழுமை பெற்றிருக்கும்.

எம். செல்லப்பன்
பழநியப்பா பிரதர்ஸ்
திருச்சி

குருவாயூரப்பனின் சிறப்புகளை வலையபட்டி எஸ். கணபதி அவர்கள் அழகிய முறையில் தந்திருந்தார்கள். குருவாயூரப்பனின் படமும் கண்களைக் கவர்ந்தது. தொடரட்டும் இது போன்ற நற்பணி.

பழ. வள்ளியப்பன்
தஞ்சாவூர்

முனைவர் சுப. அண்ணாமலை

அவர்கள் எழுதியுள்ள 'அன்று கட்டினோம்; இன்று பிரிக்கிறோம்' என்னும் கட்டுரை கண்களில் நீரை வரவழைத்தது, சிக்கலை மட்டும் விளக்காமல் அச்சிக்கல் எழுந்த காரண காரியங்களையும் ஆய்ந்து அது தீர்க்கப்பட வேண்டிய விதத்தையும்விவரித்துள்ளது. இக்கட்டுரையை நகரத்தார் சங்கங்கள் படியெடுத்து தம் உறுப்பினர்களுக்கு வழங்குவதோடு கட்டுரையில் குறிப்பிட்டுள்ள ஆறு அற்புதமான யோசனைகளை செல்வந்தரும் எளியவரும் கடைப்பிடிக்க கட்டுப்பாடுகளைக் கொணர முயல்தல் வேண்டும். அப்படிச் செய்தால் வீட்டிற்கு மூவர் அல்லது நால்வர் என கண்ணீரும் செந்நீரும் சிந்தும் நமது இனச் சகோதரிகளின் வாழ்வு மலரும்; நமது குலமும் தழைக்கும்.

மு. நா. நாராயணன்
காரைக்குடி

'அன்று கட்டினோம்; இன்று பிரிக்கிறோம்' 'புலவர் போற்றும் புகழ்க் குலம்' போன்ற கட்டுரைகள் என் மனதைக் கவர்ந்தன. வளர்க தொண்டு.

கவிஞர் சேது அருணாசலம்
தேவகோட்டை

'குருவாயூரப்பனின் சிறப்புகள்' பற்றிய கட்டுரை நன்றாக இருந்தது. முனைவர் சுப. அண்ணாமலை அவர்கள் எழுதியுள்ள கட்டுரை அனைவரும் - குறிப்பாக இளைஞர்கள் சிந்திக்க எழுதப் பெற்றதாகும்.

மேலைச்சிவபுரி முத்துராமன்
திருச்சூர்

விழுப்புரம் சங்கத்தின் ஆண்டு விழா

விழுப்புரம் நகரத்தார் சங்கத்தின் 6ஆம் ஆண்டுவிழா 26-1-89 அன்று விநாயகர் ஆலயத்தில் அபிசேக ஆராதனைகளுடன் எளிமையாகக் கொண்டாடப்பெற்றது. 22-1-89 ஞாயிறு தைப்பூசத்தை முன்னிட்டு நகரத்தார் இல்லங்களிலிருந்து அரிசியும் பொருளுதவியும் பெற்று வீரவாழியம்மன் கோவிலில் சுமார் 500 பேருக்கு அன்னதானம் செய்யப்பெற்றது.

நகரத்தார் திருத்தணிப் பாத யாத்திரைக் குழு

நகரத்தார் திருத்தணிப் பாத யாத்திரைக் குழுவினர் பங்குனி உத்தரத் திருநாளிற்கு பதினேராம் ஆண்டு பாத யாத்திரையாகக் காவடி முத்திரைகளுடன் சென்னை, பவளக்காரத் தெருவிலுள்ள புதுத் தெண்டாயுதபாணி கோயில் வீட்டிலிருந்து விபவ ஆண்டு பங்குனித் திங்கள் 4-ஆம் நாள் (17-3-89) வெள்ளியன்று காலை 5 மணிக்குத் திருத்தணி புறப்பட்டுச் செல்கின்றனர் பங்குனித் திங்கள் 8ஆம் நாள் 21-3-89 செவ்வாய்க் கிழமை பங்குனி உத்தரத்தன்று காலை 9 மணியளவில் காவடி, பாற்குடங்கள் செலுத்த உள்ளனர்.

16-3-89 வியாழனன்று பவளக்காரத் தெரு, புதுத் தெண்டாயுதபாணி கோயில் வீட்டிலிருந்து மாலை 6 மணிக்குக் காவடி கட்டி இரவு சுமார் 9 மணிக்கு அரோகராச் செய்தல் 17-3-89 வெள்ளி காலை 5 மணிக்குப் புறப்படுதல். பகல் அம்பத்தூர். மாலை 5 மணிக்கு அம்பத்தூரிலிருந்து புறப்பட்டு இரவு ஆவடி தங்குதல். 18-3-89 சனி மாலை 6 மணிக்கு ஆவடியிலிருந்து புறப்பட்டு பகலில் திருநின்றவூர் தங்குதல். மாலை 5 மணிக்கு திருநின்றவூரிலிருந்து புறப்பட்டு இரவு திருவள்ளூர் சேர்தல். 18-3-89 காலை 5-30 மணிக்குப் புறப்பட்டு பகல் திருவாலங்காடு சேர்தல். மாலை 5 மணிக்குப் புறப்பட்டு இரவு ஸ்டீல் பிளாண்டில் தங்குதல. 20-3-89 திங்கள் காலை 6 மணிக்குப் புறப்பட்டு பகல் சரஸ்வதி நகர் போய்ச் சேருதல். மாலை 5 மணிக்குப் புறப்பட்டு இரவு திருத்தணி சேர்தல். 21-3-89 செவ்வாய் காலை 9 மணி அளவில் காவடி முத்திரைகளுடன் பால் குடங்கள் செலுத்தி அபிஷேக ஆராதனை செய்தல்-இரவு தங்கரதம் புறப்பாடு.

செயலாளராக முத்தழகப்பச் செட்டியார் தேர்வு!

கோவிலூர் மடாலயத்தில் 27-1-89 அன்று நடைபெற்ற ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திர மேலாண்மைக் கழகத்தின் பொதுக்குழுக் கூட்டத்தில்,



மதுரை நகரத்தார் சங்கத்தின் சார்பாகக் கலந்துகொண்ட கோனபட்டு ஆர்எம். முத்தழகப்ப செட்டியார் அவர்கள் (நாகப்பா சைக்கிள் மார்ட்) செயலாளராகத் தேர்வு செய்யப்பெற்றிருக்கிறார்கள். அவர்களுக்கு நமது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

செய்தி

1988 ஆம் ஆண்டில் சிறந்த சேவைகள் புரிந்ததற்காக மதுரை டாக்டர் என். என். கண்ணப்பன் அவர்களுக்கு இந்திய ஜேசீஸ் சங்கத்தின் துணைத்தலைவரும் தமிழக ஜேசீயின் தலைவருமான ராஜா கோவிந்தசாமி அவர்கள் விருதும் பதக்கமும் அளித்துக் கௌரவித்திருக்கிறார்கள் மதுரை சென்ட்ரல் ஜேசீயின் தலைவர் திரு. ஓ பி. டி. அசோக்கும் சங்கம் சார்பாக ஒரு விருது அளித்துள்ளார்.

வேதாரண்ய மஹோதயப் பெரு விழா

'ஆதிசேது' என்றழைக்கப்படும் வேதாரண்யத்தில் திருவோண நட்சத்திரத்தில், அமாவாசையன்று, வியதிபாத யோகத்தில், நாள், நேரம், திதி, யோகம் என்று நான்கும் கூடும் சூரியோதயத்தில், "மஹோதயம் கொண்டாடப்" பெற்றது. பதினான்கு ஆண்டுகள் இடைவெளிக்குப் பிறகு 6-2-1989 அன்று இவ்விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இலட்சக்கணக்கான மக்கள் சூரியோதயத்தில் வேதாரண்யம் கடற்கரையில் கூடி நீராடினர். பக்தர்கள், ஆதிசேது, சித்தாஷ்ரமம், சன்னதிக்கடல், வேதாமிர்தக்குளம், கோவிலின் உட்புறமுள்ள மணிகர்ணகைக்குளம் ஆகிய ஐந்து புனிதத் தலங்களிலும் கூடி நீராடினர்.

'திருமறைக்காடு' என்றறியப்படும் வேதாரண்யம் ஒரு புனிதத் தலமாகும். நான்கு வேதங்களும், தங்கள் இன்னல் தீர்ந்தவுடன், வேதாரண்யீஸ்வரருக்கு வழிபாடு நடத்தியதாகப் புராணங்கள் கூறுகின்றன. இறைவனது அருளைப் பெற்றபின் வேதங்கள் ஆலயத்தின் பெருவாயில் அடைத்து விட்டனவாம். ஞானசம்பந்தர், இறைவனைப் புகழ்ந்து தேவாரம் பாடிய பின் தான் வாயில் திறந்ததாம்.

இராமபிரான் இலங்கைக்குச் செல்லு முன்பு இங்கு வழிபட்டதாகச் சொல்லப்படுகிறது. இராவணனது கோட்டையை, 'இராமர் பீட'த்திலிருந்து அவர் முதலில் பார்த்ததாகப் புராணம் கூறுகிறது. இராமர் பீடத்திலிருந்து இராவணனது கோட்டை பின்புறமாக அமைந்திருந்ததால், அதைத் தவிர்த்து, தென்திசையில் தனுஷ்கோடி வரை செல்ல இராமர் தீர்மானித்தார். இலங்கையிலிருந்து திரும்பிய போது, இராவணனை வதம் செய்த பாவம் தீர வேதாரண்யம் ஆலயத்தில் உள்ள விநாயகப் பெருமானை வழிபட்டதால், அந்த விநாயகர் 'இராம வீரஹத்ய விநாயகர்' எனப் பெயர்பெற்றார்.

இங்குள்ள கர்ப்பக்கிருகம் சிவாலயங்களில் மிகவும் சிறப்புடையது. வழக்கமாகக் காணப்படும் லிங்க வடிவிற்குப் பதில், வேதாரண்யத்தில் ஈசன், கல்யாண சுந்தரேஸ்வரராகக் காட்சியளிக்கிறார்.

ஆறடி உயரமுள்ள, சிவ-பார்வதியின் கருங்கல் சிற்பம், தென்னிந்திய சிற்பக்கலையின் மிகச் சிறந்த அழகுள்ள மாதிரியாகும்.

இங்குள்ள அஷ்டபுஜ துர்க்கை அம்மன் வழக்கத்திற்கு மாறாகத் தெற்கு நோக்கியுள்ளது. இந்தத் தென் திசையில் தான் அரக்கன், மஹிசாசுரன் சம்ஹாரம் செய்யப்பட்டான். அதுதான் காரணம்.

வேதாரண்யம் கோவிலில் உள்ள சரஸ்வதிதேவியின் கைகளில், வழக்கமாகக் காணப்படும் வீணை இல்லை. பார்வதிதேவியின் தேனினும் இனிய பேச்சைக் கேட்டு, இன்புற்று, அந்தக் குரலின் நாதஇனிமையை மரியாதை செய்வதற்காகத் தன் வீணையை மீட்டுவதில்லையென்று சரஸ்வதி முடிவு செய்தது தான் காரணம்.

வன்னி, புன்னை என்று இரு தலவிருட்சங்கள் இங்கு உள்ளன.

வேதாரண்ய ஆலயம், தம் நாட்டில் உள்ள பழமையான ஆலயங்களில் ஒன்று. சேர, சோழ பாண்டியர் காலந்தொட்டே இக் கோவில் உள்ளதாகக் கோவில் கல்வெட்டுக்கள் சான்று பகர்கின்றன. இலங்கை அரசர்களும் இதனை வழிபட்டுள்ளனராம்.

இத்தகைய சிறப்புடைய வேதாரண்யம் சென்று வேதாரண்யீஸ்வரனின் அருளை நாமும் பெறுவோமாக!

— ஆவணிப்பட்டி
இராம. முத்தையா
திருவனந்தபுரம்

NOTICE

Form IV

(See Rule 8)

Statement of ownership and other particulars about "NAGARATHAR KURAL" Monthly, Madurai.

1. Place of Publication: 25, NorthChitrai St., Madurai-625 001
2. Periodicity of its Publication : Monthly
3. Printer's Name : A. Palaniappan
   Nationality : Indian
   Address : Expo Printers
   20, Krishnapuram 4th Cross Street
   Madurai-625 009.
4. Name of Editor : V. N. Chidambaram
   Nationality : Indian
   Address : 21, Kamala 2nd Street
   Chinna Chokkikulam
   Madurai-625 002
5. Name and address of Publisher & Owner : SP. A. Nadarajan
   Plot No. 377
   Anna Nagar
   Madurai-625 020

I, SP. A. Nadarajan hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Date: 28—2—89.

(Sd) SP. A. Nadarajan
PUBLISHER

கடவுள் எங்கும் இருக்கிறார்!

குருநாதர் ஒருவர் தன் சீடனிடம் "உலகில் உள்ளவை எல்லாம் கடவுள் வடிவங்கள் என்று எண்ணி வணங்க வேண்டும்" என்று உபதேசித்தார். ஒருநாள் அந்தச் சீடன் விறகு சேகரிக்க காட்டுக்குச் சென்றான். அப்போது யானை ஒன்று மதம் கொண்டு ஓடி வந்தது. யானை மீதிருந்த யானைப்பாகன் "எல்லோரும் ஓடுங்கள்; யானைக்கு மதம் பிடித்து விட்டது" என்று யானை மீதிருந்து கத்திக் கொண்டே வந்தான். இதைக் கேட்டதும் காட்டுக்குள் இருந்தவர்கள் அனைவரும் ஓடிவிட்டனர். ஆனால் அந்தச் சீடன் "நானும் கடவுள்; இந்த யானையும் கடவுள்" என்று சொல்லிக் கொண்டே யானைவரும் வழியில் நின்று கைகளைக் கூப்பிக்கொண்டு நாராயண ஸ்துதியைப் பாடத் தொடங்கினான். யானைப்பாகன் "ஓடி விடு! ஓடி விடு!" என்று கத்தினான்; ஆனால் சீடன் நகரவில்லை. ஓடி வந்த யானை சீடனைத் தூக்கி எறிந்து விட்டுப் போய்விட்டது. சீடன் பலத்த காயங்களுடன் மூர்ச்சித்து விழுந்தான்.

யானை போனபின் அங்குள்ளவர்கள் சீடனை குருவிடம் கொண்டு போய்ச் சேர்த்தார்கள்; சிகிச்சை அளித்தார்கள். நடந்தவற்றை குருவிடம் விளக்கினார்கள். மயக்கம் தெளிந்த பின் குருநாதர் சீடனிடம் "யானை வந்ததுதான் உனக்குத் தெரியுமே; நீ ஏன் ஓடவில்லை" என்று கேட்டார். அதற்குச் சீடன் "உலகில் உள்ளவை அனைத்தும் கடவுள் வடிவங்கள் என்று தாங்கள் உபதேசித்து இருப்பதால், யானை வடிவில் உள்ள கடவுள் என்னை ஒன்றும் செய்ய மாட்டார் என்று ஓடாமல் இருந்தேன்" என்றான். சீடன் பதிலைக் கேட்ட குருநாதர் "அதெல்லாம் சரிதான்; நீயும் கடவுள்தான். ஆனால் யானை மேலிருந்த பாகனாகிய கடவுள் உன்னை எச்சரித்தபோது அவனது சொற்களில் உனக்கு ஏன் நம்பிக்கை ஏற்படவில்லை? நீ பாகன் வடிவில் இருந்த கடவுள் சொற்களை மதித்திருக்க வேண்டும். கடவுள் அனைவர் இதயத்திலும் இருக்கிறார் என்பது சந்தேகத்திற்கு இடமில்லாத உண்மைதான். ஆனால் பக்தி இல்லாதவர்கள், தூய்மையில்லாதவர்கள், கொடியவர்கள் ஆகியோரிடம் தொடர்பு வைத்துக் கொள்ளக்கூடாது" என்று கூறினார்.

("பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர் கூறிய கதைகள்" என்ற நூலிலிருந்து)

—அள. சித. சொ. தெ. சொக்கலிங்கம்
காரைக்குடி

நிர்வாகிகள் தேர்வு!

கோவிலூர் மடாலயத்தில் 27-1-89 அன்று நடைபெற்ற ஸ்ரீகாசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திர மேலாண்மைக் கழகத்தின் பொதுக்குழுக் கூட்டத்தில் கண்டனூர் திரு. சுப. சண்முகம் செட்டியார் தலைவராகவும், வலையபட்டி திரு. மது. குமா. நடராஜன் செட்டியார் நாட்டரசன்கோட்டை திரு. மெ. நடராஜன் செட்டியார் ஆகிய இருவரும் துணைத் தலைவர்களாகவும், கோனாபட்டு திரு. ஆர். எம். முத்தழகப்ப செட்டியார் (நாகப்பா சைக்கிள் மார்ட் மதுரை) செயலாளராகவும், வலையபட்டி திரு. நா. சுப. மணியன் செட்டியார் உதவிச் செயலாளராகவும், நாட்டரசன் கோட்டை திரு. வி. கேஎன். கண்ணப்ப செட்டியார் பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப் பெற்றிருக்கிறார்கள்.

அப்பர் பெருமானும் அரசர் சேதுபதியும்.

தம்மைவிட வயதிலே மிகவும் இளையவரான ஞானசம்பந்தரிடத்திலே அப்பர் பெருமதிப்புக் கொண்டிருந்தார். ஞானசம்பந்தப்பெருமான் சிவிகை ஏறிவந்துகொண்டிருந்தார். அவ்வூர், அப்பர்பெருமான் வாழும் ஊராயிற்றே என்ற எண்ணம் தோன்றியது சம்பந்தர்க்கு. ''அப்பர் எங்குற்றார்''? என உடன் வருவாரை ஞானசம்பந்தர் வினவினார். பல்லக்குச் சுமப்பாருள் ஒருவராக, ஞானசம்பந்தர் ஏறி வந்த சிவிகையைச் சுமந்து வந்துகொண்டிருந்த அப்பர் ''இதோ இங்குற்றேன்'' என்று அமைதியாகக் கூறினார். ஞானப் பழமாகிய அப்பர் தன் சிவிகை சுமப்பதா என ஞானசம்பந்தர் பல்லக்கினின்றும் உடனே குதித்துவிட்டார்.

அமெரிக்க நாட்டிற்கு விவேகாநந்தரை அனுப்பிவைத்தார் இராமநாதபுரம் மன்னர் பாஸ்கரசேதுபதி. அமெரிக்க நாட்டில் தன் உரைமுழக்கத்தால் உலகப்புகழ்பெற்ற விவேகாநந்தர் இந்தியா திரும்பும்போது இராமேஸ்வரத்தில்தான் இறங்குவேன் என யாழ்ப்பாணம் வழியாக இங்குவந்து கரை ஏறினார். இராமநாதபுரம் புகைவண்டி நிலையத்தில் இருந்து விவேகாநந்தரை ஊர்வலமாக அழைத்துவந்தனர். நான்கு மனிதர்கள் விவேகாநந்தர் அமர்ந்திருந்த அழகான சாரட் வண்டியை இழுத்துவந்தனர். அப்போது விவேகாநந்தர் ''மன்னர் பாஸ்கரசேதுபதி என்னை வரவேற்க வருவாரென்று நினைத்தேன், வரவில்லையா?'' என்று கேட்டார். ''இதோ வந்துள்ளேன்'' எனக் கீழேயிருந்து குரல் கேட்டது. வண்டியை இழுத்துவந்த நால்வரில் சேதுபதி மன்னரும் ஒருவர்!

அப்பர் சம்பந்தரின் பல்லக்குச் சுமந்தது போல் அரசர் சேதுபதி விவேகாநந்தர் அமர்ந்த வண்டியை இழுத்துவந்தார். என்னே பெரியவர்களின் உயர்ந்த மனம்!

ஓங்குசைவ நெறிகாத்த உயர்ஞான சம்பந்தன்
தாங்கருசீர்ப் பல்லக்கைத் தாங்கிய அப்பரைப்போல்
துங்காஅலை கடல்தாண்டித் துறவிவிவே கானந்தன்
ஈங்கெழுகால் சேதுபதி இழுத்தனர் வண்டிமாதோ.

(தேவகோட்டை நகரச் சிவன்கோவில் குடமுழுக்கு விழாவில் 'பொற்கிழிக் கவிஞர்' 'காசிஸ்ரீ' திரு. அரு. சோமசுந்தரன் கூறியது.)

கவிதை எழுதியவர்: டாக்டர் சபா. அருணாசலம்.

பெங்களூரில் பால்க்குடம்

பெங்களூர் நகரத்தார்கள், நகரத்தார்களின் ஜென்ம நட்சத்திரமான அனுஷ நட்சத்திர தினத்தன்று (1-2-89) பெங்களூர் விஸ்வேஸ்வரபுரம் முருகன் கோவிலிலிருந்து பாதயாத்திரையாக பால்க்குடம் எடுத்து பெங்களூர் கெஞ்சனஹள்ளியில் உள்ள ஸ்ரீ ஞானாட்சி ராஜராஜேஸ்வரி கோவிலுக்குச் சென்று ஸ்ரீ ராஜராஜேஸ்வரி அம்மனுக்கு அபிஷேகம் செய்து அம்மன் அருள்பெற்று வந்தார்கள். பால்குடத்துடன், நகரத்தார் பெருமக்கள் பலர் நடந்தும்வந்தார்கள். சென்ற ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டு பால்க்குடம் அதிகம் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

நாட்டுப் பாடல்கள்...

வி. ஆர். சின்னஅருணசலம்
தேவகோட்டை

சிறு குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை பாடல்களைக் கேட்டு இன்புறுவதைக் காண்கிறோம். கவிதைகளை வாயாரப் பாடியும் கேட்டும் இன்புறும் வழக்கத்தையும் நெடுங்காலமாக மனித சமுதாயத்திடம் காண்கிறோம். மனிதன் வரையறை செய்து வளர்த்து வரும் பூந்தோட்டத்திலும் மலர் உண்டு அவன் வளர்க்காத காட்டிலும் மலர் உண்டு. இக் காட்டு மலர் போன்ற நாடோடிப் பாடல்கள் நம் தமிழ் நாட்டில் அதிகமாக வழங்குகின்றன.

"மலர்களை இறைவனுக்குச் சாத்த எடுக்கின்றோம்; அவற்றின் மேல் மூச்சுக் காற்றுப் படாமல் வாயை மூடிக் கொண்டு மெல்ல எடுங்கள்" என்று சொல்வதை நாம் கேட்டிருக்கின்றோம்; ஆனால்,

"கையாலே பூ எடுத்தால் காம்பழுகிப் போகுமின்னு
விரலாலே பூ எடுத்தால் வேரழுகிப் போகுமின்னு
பொன்னூசி கொண்டு பூத்த மலரெடுத்து
வெள்ளூசி கொண்டு வெடித்த மலரெடுத்து"

என்ற நாடோடிக் கவிஞனின் கவிதையைக் கேட்டிருக்கின்றோமோ?

காதற் பாடல்களுக்கும் நாடோடி இலக்கியத்தில் பஞ்சமே இல்லை.

கண்ணன் முகம் மறந்து போனால்—இந்தக்
கண்கள் இருந்து பயன் உண்டோ
வண்ணப் படமும் இல்லை கண்டாய்—இனி
வாழும் வழி என்னடி தோழி!

என ஏங்குகிறாள் பாரதி காணும் காதலி. ஆனால் நாடோடிக் கவிஞன் காணும் காதலிக்குத்தான் என்ன அறிவு! வாழும் வழி தெரியாதவள் அல்ல! அவள் என்ன செய்கிறாள் தெரியுமா?

"ஒரு நாள் ஒரு பொழுது உன் முகம் பாராமே
ஓடக் கரை மண்ணெடுத்து உருவாரம் செஞ்சு பார்த்தேன்"

என்கிறாள்.

கணவனை இழந்த மகளிர் தமது துயரை ஒப்பாரியில் வடித்துக் காட்டும் போது உண்டாகும் அவலச் சுவை, இலக்கியத்தில் எங்கும் காணமுடியாது. அந்த அவல உலகமே தனி!

மையினால் இட்ட பொட்டு
நெய்யாய் உருகவில்லை
பந்தல் பிரிக்க வில்லை
வந்த சனம் போக வில்லை

பலகாரம் சுட்ட சட்டி
பாதி மணம் போக வில்லை
இட்லி சுட்ட சட்டி
எடுத்துக் கவுக்க வில்லை
கோலம் அழியவில்லை
கொட்டுக்காரன் போகவில்லை

அதற்குள் இடி விழுந்து விட்டது. இதற்கும் மேலான கவிதை ஒன்று இதோ:-

சில்லென்று பூத்த
சிறுநெருஞ்சிக் காட்டுடே
நில்லென்று சொல்லி
நிலை நிறுத்திப் போனீரே!
தலையை வகுந்து
தாழம் பூச்சூடி
தலையிலே உள்ளெழுத்தை
தாயார் அறியவில்லை!

இப்படி எத்தனையோ ஆயிரம், எழுதாத கவிதைகள் ஒன்பான் சுவையும் மிகுந்து நம் தமிழ் நாடெங்கினும் காணப்படுகின்றன. இக் கவிதை மலர்ச்சரம் தமிழ் நங்கையை அழகு பண்ணும்! தோட்டத்து ரோஜாவினால் அழகு பெறும் அம் மங்கை, காட்டு முல்லையாலும் அழகும் மகிழ்ச்சியும் அடைவாள்!

தேவகோட்டை நகரச் சிவன் கோயிலில் குட நீராட்டு விழா!

தேவகோட்டை நகரச் சிவன் கோயிலில் இரண்டு ராஜ கோபுரங்கள் புதிதாக அமைக்கப் பெற்று திருக்குட நீராட்டு விழா 10-2-89 காலை 9 மணியளவில் சிறப்பாக நடைபெற்றது. கோவிலூர் ஆண்டவர் மடாலயத்தின் தலைவர் தவத்திரு காசிவிஸ்வநாத ஞான தேசிகர், கலாமடம் பாதரக்குடி ஆதீனகர்த்தர் தவத்திரு இரவீந்திர சுவாமிகள் தவத்திரு திருச்சி சுவாமிகள் ஆகியோர் பங்கு பெற்று ஆசி கூறினர். திருமுருக கிருபானந்த வாரியார், தவத்திரு குன்றக்குடி அடிகளார், முனைவர் திருமதி சரஸ்வதி இராமநாதன், 'காசிஸ்ரீ' திரு. அரு. சோமசுந்தரன், அருட்கவி திரு கு. செ. இராமசாமி ஆகியோரின் சொற்பொழிவுகள் நிகழ்ந்தன. ஏஎல். ஏஆர். எஸ்எம். நாராயணன் செட்டியார் அவர்களும் தேவகோட்டை நகரத்தார்களும் விரிவான ஏற்பாடுகளைச் செய்திருந்தனர். மகா அபிஷேகம், திருக்கல்யாணம், பஞ்சமூர்த்தி உலா ஆகியவையும் சிறப்பாக நடைபெற்றன.

இயற்கை எய்தினர்

பள்ளத்தூர் ராம. நா. ரெ. ரெங்கநாதன செட்டியார் அவர்கள் தமது 66 ஆவது வயதில் கடந்த 10-2-89 அன்று இயற்கை எய்தினார்கள். இவர்களுக்கு மனைவியும் மூன்று புதல்வர்களும் ஒரு புதல்வியும் உள்ளனர்.

மனப் பொருத்தம் பார்த்தே மாலையிட்டு வாழ்ந்திடுவோம்!

கவிஞர் சிவல்புரி சிங்காரம், கீழச்சிவல்பட்டி

தங்க நகைகேட்டுத் தாரத்தைத் தேடாமல்
தங்கக் குணமுடைய தாரகையை மணந்திடுவோம்!
வெள்ளிக் குடம்கேட்டு வேல்விழியைப் பார்க்காமல்
வெள்ளிப் பணம்சேர்த்து விருப்பமுடன் மணந்திடுவோம்!
வைரச் சரம்கேட்டு வனிதையினைத் தேடாமல்
வைர மனத்தோடு வாழ்க்கையினை ரசித்திடுவோம்!
பித்தளைச் சாமான்கள் பெருவாரி கேட்காமல்
பித்தான வாழ்க்கையிலே பெருமைகளைக் குவித்திடுவோம்!
வெங்கலச் சாமான்கள் விதம்விதமாய்க் கேட்காமல்
வெங்கலக் குரலாலே விருந்துகளைப் பேணிடுவோம்!
இருப்புச் சாமான்கள் ஏராளம் கேட்காமல்
இருப்பு பணத்தினையும் இளகிவர வைத்திடுவோம்!
அலுமினியச் சாமான்கள் அதிகளவு கேட்காமல்
அழுப் இனிய பெண்களுக்கு ஆதரவைத் தந்திடுவோம்!

வேப்பாக்கள் கேட்டு வேதனையைத் தூண்டாமல்
வெம்பான வாழ்க்கையினைக் கரும்பாக மாற்றிடுவோம்!
அண்டாக்கள் கேட்டு அடம்பிடித்து நிற்காமல்
அண்டிவந்த பெண்களது அழுகையினைத் துடைத்திடுவோம்
செப்புக் குடம்கேட்டு சேயிழையை வெறுக்காமல்
செப்பும் மொழிகேட்டுத் திட்டமிட்டே வாழ்ந்திடுவோம்!
அடுக்கு வகைகேட்டே ஆர்ப்பாட்டம் செய்யாமல்
அடுக்கு மொழிபேசி அழகாக வாழ்ந்திடுவோம்!
தேங்குழலைக் கேட்டே திருமணத்தை நிறுத்தாமல்
தேங்கியுள்ள குழல்மாதர் திருமணத்தை முடித்திடுவோம்!
மனகோலம் கேட்டே மனமீவாட வைக்காமல்
மணக்கோலம் காண மகிழ்வோடு வழிவகுப்போம்!

சீதனத்தைக் கேட்டு திருமணத்தை நிறுத்தாமல்
சீ!தனமே! என்றுரைத்து தித்திக்க வாழ்ந்திடுவோம்!
பூச்சரத்தைக் கேட்டு புலம்பியழ வைக்காமல்
"பூ"ச்சரத்தைச் சூட்டிப் புதியசுகம் பெற்றிடுவோம்!
பணப்பொருத்தம் பார்த்தே பாவையினை மணக்காமல்
மனப்பொருத்தம் பார்த்தே மாலையிட்டு வாழ்ந்திடுவோம்!
முறைநகைகள் என்றே முறையின்றிக் கேட்காமல்
முறையோடு கேட்டே முழுச்சுகமும் பெற்றிடுவோம்!
பின்முறைகள் கேட்டே பெரிதுமனம் வாடாமல்
தன்முறையில் வாழ தானைமுதல் கற்றிடுவோம்!

வலது பக்கம் - அட்டையில்......

நடராஜபுரத்தில் 3-2-89 அன்று நிகழ்ந்த செல்வன் தங்கமணி-செல்வி மணிமேகலை திருமண விழா வாழ்த்தரங்கில் வி. என். சிடி. அவர்கள் தலைமையில் 1. குழந்தைக்கவிஞர் திரு. அழ. வள்ளியப்பா 2 'காசிஸ்ரீ' திரு. அரு. சோமசுந்தரன் 3. 'புலவர்மாமணி' திரு. மா. முத்துராமன் 4. 'பொற்கிழிக் கவிஞர்' திரு. சொ. சொ. மீ. சுந்தரம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கும் காட்சிகள்.

இராங்கியம் சுப்பிரமணியர் கோயிலின் குட நீராட்டு

இராங்கியத்தில் புதிதாக அமைக்கப்பெற்றுள்ள அருள்மிகு வள்ளி தேவயானை உடனுறை சுப்பிரமணியர் நூதன ஆலயத்தின் குட நீராட்டு விழா 10-2-89 (தை|மீ 28உ) வெள்ளி காலை 9-20 மணி அளவில் சிறப்பாக நடைபெற்றது.

யாகசாலைப் பூஜையை சர்வ சாதகம் திரு எம். மாணிக்கசுந்தரபட்டர் ஏற்றுச்சிறப்பாகச் செய்திருந்தார். குட நீராட்டு விழாவில் தாலாட்டுக்கவிஞர் திரு. T குமரப்பன நேர்முக வர்ணனை செய்தார்.

இராங்கியம் நகரத்தார்கள் வள்ளி தேவயானை உடனுறை சுப்பிரமணிய சுவாமிக்குப் பட்டுச் சாத்தி வழிபட்டனர். பின்னர் இராங்கியம அருகிலுள்ள ஊர்களின் நகரத்தார்கள் பட்டுச் சாத்தினர். திருப்பணிக் குழுவைச் சேர்ந்தவர்கள் மாலையிட்டுக் கௌரவிக்கப் பெற்றனர். மாலை மகாஅபிஷேகமும் இரவு சுவாமியின் திருஉலாவும் நடைபெற்றன.



எக்ஸ்போ பிரிண்டர்ஸ் 20, கிருஷ்ணபுரம் 4-வது குறுக்குத்தெரு மதுரை-625 009 ல் அச்சிட்டு சுப. அ. நடராசன் அவர்களால் 25, வடக்குச் சித்திரை வீதி, மதுரை-625 001லிருந்து வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர்: வி. என். சிதம்பரம்.

